இலவச வெளியீடு: GERMANY , ENGLAND தை. Jan. 2017

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர்

மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை



Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# மாற்றங்கள் வெற்றிகளின் நுழைவுச் சீட்டுகள்!



எம்.ஜி.ஆர் 100 வயது
சிறப்பிதழ்

இந்தப்
புத்தாண்டை
மீண்டும் சில
வாக்குறுதிகளோடு
வரவேற்போம்!

அனைவருக்கும் எங்கள்
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

## கனவு



நினைத்தேன் வந்தாய் நூறு வயது

T.T.S.Brothers GmbH&Co.KG

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்

சகல Alarmanlage, Überwachung Kamera,பொருத்துதல்..
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740

டோட்முண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!

Gopara Gnanam

Textiles & Jewellery Shop

Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund

One day Sale
21.01.2017
Page.10



என்றும்
புதியது
அழகின்
இரகசியம்
அது.

Tel:0231 9501 647

Mr.P.Sritharan.
Proprietor

S.K.Silks & Gold Paraadise

தைப் பொங்கலை முன்னிட்டு
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!
புத்தம், புதிய, வரவுகளான எம்பிறோய்ட் சேலைகள் (Embroidery Sary)
மற்றும் திருமணப் பட்டுப்புடவைகள், அனைத்திற்கும் நாடுங்கள்.

50% Off
15.01.2017 வரை



S.K.Silks

Blous

அழகாகவும் அளவாகவும்
உங்கள் பிளவுஸ் சேலைக்கு மேலும்
மெருகூட்டும் வண்ணம்
தைத்துக் கொடுக்கப்படும்.



Adler str 33 - 44137 Dortmund



Tel.: 0201/236925

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN


# நினைத்தேன் வந்தாய் நூறுவயது

மாதவி

நாம் ஒரு வரை நினைக்க அவர் எதிரில் வந்தால் உடன் சொல்வோம். அட நூறுவயது உங்களுக்கு நான் நினைக்க நீங்கள் வாறிங்கள் என்று.

இந்த நினைப்பு எமக்கு பிரியமானவர்கள் அப்படி நினைக்க எதிர் வந்தால் பிரமிப்பும் மகிழ்ச்சியும் இரட்டிப்பாகும். இந்த வரிகள் யாவரும் தம் வாழ்வில் அடிக்கடி சொல்லும் வரிதான். இதனை கவிஞர் வாலி காவல்காரன் திரைப்படத்தில் எம்.ஜி.ஆரை நினைத்து அவர் காதலி ஜெயலிதா சொல்வது போல்,காதல் காட்சிக்கு பாடல் எழுதியபோது அது எம்.ஜி.ஆருக்கு மட்டுமே சொன்ன வரிகள் போல் ஆகிவிட்டது.

அந்த எகிப்தின் பிரமாண்டமான பிரமிட்டுக்களுக்கு மத்தியில் எம்.ஜி.ஆர் அரசனாகவும், ஜெயலிதா அரசியாகவும் ஆடிவரும் அந்தப் பாடல் காட்சி அப்படியே இன்றும் எம்மனதில் நிற்கின்றது. அந்தாக் காட்சியில் அமைக்கப்பட்ட எகிபித்து நாட்டில் உள்ள பிரமிட்டுக் களின் வடிவம், அன்று எமக்கு அது செட் என்று தெரியவே இல்லை. அப்படிப் பாடலும் காட்சியும் அவர்களது பாவமும் எம்மைக் கட்டிப் போட்டது.

நினைத்தேன் வந்தாய் நூறு வயது என்று சொன்னபோது உண்மையில் அந்த நாளில் நாம் இருப்போம் என்று எண்ணாவிட்டாலும், மக்கள் திலகம் 100 வயதுவரை வாழ்வார் என்று எண்ணினோம். ஆனால் அவர் உயிரும் உடலும் 70 வயதுடன் மறைந்துவிட்டது. ஆனால் அவரது புகழ் நூறாவது வயதிலும் மாறாத புகழாகவே உள்ளது. நாளை எதுவும் நடக்கலாம். ஆனால் அவர் ஆரம்பித்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றும் ஆட்சியில் உள்ளது என்பது சிறப்பானதே.

அவர் செதுக்கி வைத்துவிட்டுச் சென்ற செல்வி ஜெயலலிதா அம்மையார் அவரது இலட்சியத்தை சிறப்பாக ஏற்று ஆட்சியை அமைத்து வந்தார். ஆனால் இன்று அமையாரும் மறைந்துவிட்டார்.



இருந்தாலும் முதலமைச்சராக இருக்கும் போதே மரணித்தவர்கள் வரிசையில் மக்கள்திலகத்துடன் அவரும் இணைந்து கொண்டார்.

மக்கள் திலகம் மக்களை உளமார நேசித்தவர். இலங்கையில் உள்ள தமிழ் மக்களை காண வந்த முதல் முதலமைச்சர் அவர்தான் (வரும்போது முதலமைச்சர் அல்ல ஆனால் முதலமச்சரானவர்கள் எவரும் எம் மண்ணில் கால் பதித்தவர்கள் அல்ல) கண்டியில் பிறந்தவர்.




எவருக்கும் மண்டியிடாத இலச்சியத்துடன் வாழ்ந்து மறைந்தவர்.

படங்களில் நல்லதையே செய்து செய்து அதுவாகவே மாறியவர். நீ எதுவாகிறாயோ அதுவாகிறாய் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இன்று வெற்றிமணியில் மக்கள் திலகத்தின் நூறுவயது கொண்டாட்டத்தை ஒவ்வெரு பக்கமும் அவருடைய பாடல்கள், அல்லது அவர் நடித்த படங்களின் தலைப்பிலேயே கட்டுரைகள் அமைந்து சிறப்புச் செய்கின்றன. கட்டுரைகள் யாவும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் பற்றியது என்று, தலைப்புக்களை பாரத்து தவறுதலாக எண்ணிவிடாதீர்கள்.

உதாரணம் “குடி இருந்த கோவில்” என்ற தலைப்பு தாய் பற்றிய கட்டுரையாகவும், “உதயசூரியனின் பார்வையிலே” என்ற பாடல் தலைப்பு தைப்பொங்கல் பற்றிய உலகளாவிய கட்டுரையாகவும், “கண்ணன் என் காதலன்”, காதலின் அந்தரங்கத்தைக்கூறும் சிறுகதையாகவும். “நாளை நமதே” குறுங்கதையாகவும் அமைந்துள்ளது.

எம் தாயக உறவுகளுடன், மக்களுடன் கலையால், உணர்வால் இரத்தத்தின் இரத்தமாக ஒன்று பட்டு இருந்த மக்கள் திலகத்தின் “நூறாவது வயது கொண்டாட்டம்” ( 17.01.2017) நாமும் கொண்டாடி மகிழ்வது சினிமா என்ற வட்டத்துக்குள் மட்டு அல்ல என்பது நிதர்சனம்.

மக்கள் திலகத்தின்
100 வயது கொண்டாட்டம்!
வெற்றிமணி “தை 2017 இதழ்”
மக்கள் திலகத்தின்
100 வயது சிறப்பிதழாக
மலர்கிறது.




T.P 015 20 41 24 756
017 67 27 87 821




திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி






சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 244



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

“வெற்றிமணிமொழி”
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy Ltd


# குடியிருந்த கோயில்

**அன்னையின் தலைகோதும் விரல்களுடன் வாழும் பிள்ளைகள்**
**ஆசீர்வாதங்களோடு வாழ்கின்றனர்,**
**தொலைவில் இருந்தால் தினமும் தொலைபேசியிலேனும்**
**அவர்களுடன் பேசுங்கள்**

– வெற்றி மைந்தன்



எம்.ஜி.ஆரின் பிறந்த நாளை அவரது ரசிகர்களும், மக்களும், தொண்டர்களும் மிகப்பெரிய அளவில் கொண்டாடுவார்கள். ஆனால் எம்.ஜி.ஆர் தனது பிறந்த நாளை அதிகம் கொண்டாடியதில்லை. அந்த நாள் அவருக்கு பரவசமான நாளாகவும் இருந்த தில்லை என்பது தான் உண்மை. அவரோடு இருந்த மக்களுக்கே அது மிகப்பெரிய வியப்பைக் கொடுத்தது. ஒரு முறை அவரிடம் வெளிப்படையாகவே கேட்டு விட்டார்கள்.

”பிறந்த நாள் தான் ஒரு மனிதனுக்கு மிகப்பெரிய மலர்ச்சியைக் கொடுக்க வேண்டிய நாள். சந்தோசமா இருக்க வேண்டிய நாள். நீங்க மட்டும் இந்த நாளில் மௌனமாகவும், கொஞ்சம் கவலையாகவுமே இருக்கிறீர்களே? ஏன் ”
அதற்கு எம்.ஜி.ஆர் சொன்ன பதில் மெய் சிலிர்க்க வைக்கிறது.



”நான் பிறந்த நாள் ஏன் கொண்டாடற தில்லைன்னு கேக்கறீங்க. கொஞ்சம் யோசிச்சு பாருங்க, இந்த நாளில் தானே என்னைப் பெற்றெடுக்க என் அம்மா கதறி யிருப்பார்கள். இந்த நாளில் தானே அவர்கள் வலியால் துடியாய்த் துடித் திருப்பார்கள்.

என் அம்மாவின் பிரசவ வலி தான் இந்த நாள் முழுவதும் எனது கண்களிலும் மனதிலும் இருக்கிறது. இந்த நாளைக் கொண்டாடவேண்டும் என நினைக்கும் போதெல்லாம் எனக்குக் கூசுகிறது.

மிகப்பெரிய தயக்கம் வருகிறது. என் அம்மா வலியால் துடித்த நாளை நான் கொண்டாடுவது நியாயமா என்ன ?”

எம்.ஜி.ஆர் சொன்ன இந்த வார்த்தைகள் அவர் தனது அன்னையின் மீது எந்த அளவுக்கு அன்பு வைத்திருந்தார் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அவர் தனது படங்களில் கூட அம்மாவை போற்றும் காட்சிகளைத் தான் வைத்திருப்பார். ஏன், படத்தின் தலைப்புகளில் கூட எம்.ஜி.ஆரைப் போல அம்மாவைச் சிறப்பு செய்த நடிகர் உண்டா என்பது சந்தேகமே.
தாய்க்குப் பின் தாரம், தாய் சொல்லைத் தட்டாதே, தாய் மகளுக்குக் கட்டிய தாலி, தாய்க்குத் தலை மகன், தெய்வத் தாய், தாயின் மடியில், தாயைக் காத்த தனையன்,குடியிருந்த கோவில், என எக்கச் சக்க படங்கள் அம்மாவை குறிப்பிடுவனவாக அமைந்தது மிகசிறப்பு !

காற்றில்லாத பூமியும், ஊற்றில்லாத நீர்நிலையும் போல அன்னையில்லாத வாழ்க்கையும் வறண்டே போகும். தமிழ் இலக்கியமும், கலாச்சாரமும் அன்னையை எப்போதுமே முதலிடத்தில் தான் வைத்திருக்கின்றன. இறைவனையே மூன்றாவது இடத்தில் தள்ளி அன்னையை முதலிடத்தில் அமர வைத்தது தான் நம் வரலாறு. மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசை ஆனாலும் சரி, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனும் கொன்றை வேந்தனானாலும் சரி, ஆதி பகவன் எனும் குறளானாலும் சரி, எங்கும் எதிலும் அன்னையே முதன்மையாய் !

அன்னை நாம் குடியிருந்த கோயில். ஆலய கருவறை அல்ல, அன்னையின் கருவறையே நமக்கு முதலில் பரிச்சயமானது. சதையாலான வீடே நாம் முளை விட்ட முதல் நிலம். தொப்புள் கொடியில் ஒரு பட்டமாய் முதலில் நாம் பறந்தது அங்கே தான். விரல் விரித்து, கால் உதைத்து நாம் முதலில் குதித்து விளையாடிய இடம் தண்ணீர் குளமல்ல, பன்னீர் குடம்.

தொட்டும் தொடாத தூரத்தில் முதன் முதலில் வருடிச் சென்றது அன்னை விரல்கள் தான். பேசாக் கடவுளுடன் பேசிக் களிக்கும் பக்தனைப் போல, வயிற்றுச் சுவருக்குள் வாகாய் நாம் கிடக்கையிலே, செல்லம் கொஞ்சிச் சிரித்து மகிழ்ந்தது அன்னையின் குரல்கள் தான். எப்பக்கம் படுத்தாலும் பிள்ளைக்கு வலிக்குமோ என தூங்காமல் தவமிருந்தே சோராமல் சோர்ந்தவை அன்னை இமைகள் தான்.

பசிக்காமல் உண்டு, குடம் குடமாய் தண்ணீர் குடித்து, எடை இழுக்க நடை தளர நடைப்பயிற்சி செய்து, பிடித்தவற்றை ஒதுக்கி பிடிக்காதவற்றை விரும்பி, தன் குழந்தைக்காய் வாழ்க்கையை அர்ப்பணிப்பது ஒரு அன்னையைப் போல வேறு யாருமே இல்லை.

தொடர்ச்சி 24ம் பக்கம்









ஏலையா க.முருகதாசன்

# என்.எம்.பெரேராவும் இந்தியப் பிரதமர் மோடியும்

இந்தியாவில் இப்பொழுது பரபரப்பான செய்தியாகவும் ஆதரவாகவும் எதிராகவும் கண்டனங்களும் விமர்சனங்களும் கொண்ட நடவடிக்கையாக இருப்பது புதிய ரூபாய் நோட்டுக்களின் அறிமுகமே. ஊழல் , லஞ்சம், கறுப்புப் பணம் என இவை யாவும் இந்தியாவின் கலாச்சாரமாகவும் வாழ்வியல் அடையாளங்களாகவும் மாறிவிட்டன.

இயல்பான நேர்மையான அணுகு முறைக்கூடான தொடர்புகள் யாவும் வழக்கொழிந்து போனவையாகவும், "தொல்பொருளாக - முன்னொரு காலத்தில் "இருந்தது என்ற சரித்திரச் சான்றாக மாறி வருகின்ற மோசமான நிலை இந்தியாவில் தொடர்கின்ற அவலத்தை காண முடிகின்றது.

இந்தியாவில் உள்ள கறுப்புப் பணத்தை ஒழிக்க இந்திய மத்திய அரசு புதிய ரூபாய் நோட்டை அறிமுகம் செய்திருக்கின்றது. இந்தியா போன்ற நாட்டில் இத்தகைய நடவடிக்கை மூலம் முற்றுமமுழுதாக கறுப்புப் பணத்தை ஒழிக்க முடியாதுவிடினும் இதுவும் கறுப்புப் பணத்தை இல்லாதொழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையே ஆகும்.

தவறான அணுகுமுறை இசைவாக்கம்பெற்ற வாழ்க்கையாக மாறியுள்ள நிலையில் புரட்டிப் போடுவது போலவும் ,தூர் வாருவது போலவும் எடுக்கப்படும் நடவடிக்கையால் பெரும்பாலானவர்கள் சிரமப்படுவார்கள் என்பது உண்மையெனினும் நாளாக நாளாக இது, நேர்மையான கலாச்சாரமாக இசைவாக்கம் பெற்றுவிடும்.

அரசாங்கம் கொண்டு வரும் திட்டங்களை அமைச்சர்களும் அதிகாரிகளும் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியாது. மக்களுக்கும் அதில் அரைவாசிப் பங்குண்டு.
இரவோடிரவாக கொண்டு வரப்பட்ட இந்த அதிரடி நடவடிக்கையால் மக்கள் சிரமப்படுகிறார்கள், மக்களுக்கு முன்கூட்டியே அறிவித்துவிட்டுச் செய்திருக்கலாந்தானே என்ற எவ்வித பலபக்க சிந்தனையுமில்லாதவர்களின் குற்றச்சாட்டுக்களை "ஆமாம் அது சரிதானே" என மக்களும் சொல்லத் தொடங்கியுள்ளார்கள்.

வங்கிகள் முன்னும் பணம் எடுக்கும் இயந்திரங்களின் முன்பும் பலமணி நேரம் வரிசையில் நிற்கும் மக்களின் சிரமம் கவனத்திற்குரியதே. ஆனாலும் மோடி அரசின் இந்த அதிரடி நடவடிக்கை நூறு வீதம் சரியானதே.

கறுப்புப் பணத்தை ஒழிக்க புதிய ரூபாய் நோட்டை அறிமுகம் செய்யப் போகிறோம் என ஒருநாள் முன்னதாகவே மத்திய அரசு சொல்லியிருந்தால் என்ன நடந்திருக்கும்.

ஊழல் செய்வதிலும் லஞ்சம் கொடுப்பதிலும் கறுப்புப் பணத்தை பதுக்குவதிலும் சமூக விரோதிகளாக இருப்பவர்கள் வெளிநாடுகளில் வெள்ளைப் பணமாக்கியும் இந்தியாவிலேயே பல முதலீடுகளைச் செய்து கறுப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றியிருப்பார்கள்.

அடைமழைக்குள்ளும் இரண்டு மழைத்துளிகளுக்கு நடுவிலே தீப்பந்தம் அணைந்துவிடாமல் கொண்டு செல்வது போன்ற ஜம்பவான்களான கறுப்புப் பண முதலைகள் உள்ள ஒரு நாட்டுக்கு இந்த அதிரடி நடவடிக்கை முற்றிலும் சரியானதே.

இது போன்ற நடவடிக்கை இலங்கையிலும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சி காலத்தில் நிதி அமைச்சராக என்.எம். பெரேரா இருந்த 1970 களில் இடம்பெற்றிருந்தது.


என்.எம். பெரேரா


சிறிமாவோ பண்டாரநாயக்கா

கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக 100 ரூபாய் நோட்டு இனிச் செல்லாது என புதிய 100 ரூபாய் நோட்டு அறிமுகம் செய்யப்பட்டது.

வங்கிகளுக்கு முன்னால் மக்கள் வரிசையில் நின்று புதிய பண நோட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்கள். அப்பொழுது இலங்கையில் அதிககூடிய பெறுமதியைக் குறிக்கும் பண நோட்டாக இருந்தது 100 ரூபாய்த் தாளே.

எனவே 1970இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு செய்ததும் சரியானது இந்தியாவில் 2016 அகிய இவ்வாண்டு மோடி அரசு செய்ததும் சரியே.

அதே வேளை இந்நடவடிக்கைக்காக நாடாளுமன்றத்தை செயல்படாமல் முடக்கி (வைத்திருந்தது) வைத்திருப்பது மிகப் பெரிய தவறாகும் என்பதை எதிர்க்கட்சிகள் உணர வேண்டும்.

எதிர்க்கட்சிகளென்றால், தாங்கள் நல்லது கெட்டது என்ற வித்தியாசமின்றி அரசு எடுக்கின்ற எல்லாத் திட்டங்களையும் எதிர்ப்பவர்கள் என்று நினைக்கிறார்கள்.தாங்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்காக பேரணிகளை நடத்துகிறார்கள்.

ஆனால் இவர்களுக்கு தாங்கள் செய்வது தவறு என்று தெரிந்தும் இதைச் செய்கிறார்கள்.

இவர்களின் இந்த நடவடிக்கை கறுப்புப் பண முதலைகளை காப்பாற்றவே வழிவகுக்கும். அதைத்தான் எதிர்க்கட்சியினர் செய்கிறார்களா? இத்தகு சிறந்த நடவடிக்கைக்கு இந்தியாவின் ஒட்டுமொத்த கட்சிகளுமே ஆதரவு தெரிவித்திருக்க வேண்டும். அனைத்து மக்களும்கூட மத்திய அரசுடன் கைகோர்த்து நிற்க வேண்டும்.




# இரகசியம் ஆனால் உண்மை!!!

Lena Jus

Bj Zentrum

நீடித்த சந்தோஷத்தில்
நிறைவுதரும் வாழ்க்கை
என்றும் நிலைத்திருக்கும்

ஒரு Cup கோப்பியில் உங்களின் மகிழ்ச்சி

**மகிழ்வின் உச்சம் அது**

**Lena Café**



**பருகுங்கள் பலன் பெருகும்**



யேர்மனி உட்பட
ஐரோப்பா முழுவதும்
முகவர்கள் தேவை

இது ஒரு கோப்பி மட்டுமே,பக்கவிளைவுகள் எதுவுமில்லை.
இல்லறத்தில் இணைந்துள்ள ஆண்கள் அனைவரும்
எந்த வயதிலும் இந்தக் கோப்பியைப் பருகலாம்.

சர்க்கரை நோயால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டவர்களும் மீண்டும் பலம்பெறலாம்.

தொடர்புகளுக்கு:

**Burkhard Jung** தமிழில் உரையாடலாம்.**0151 2793 7382**

**வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333**

புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 14ம் திகதிக்கு முன் தொரடர்பு கொள்ளவும்

# TKS BEST FOODS

Asia Afro & Europäische Lebenamittel Einzelhandel

TKS BEST FOODS

Dortmund
நகரில்

தைப் பொங்கல்

**மலிவு விற்பனை!**

உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப் பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்

அறிந்து கொள்ள எமது இணையத்தளம்
மற்றும் முகப் புத்தகத்தினைப் பார்வையிடவும்!

www.tks- bestfoods.de

Öffnungzeiten
9:00-20.00
Son & feiertage
geschlossen






மற்றும் சமையல் உபகரணப் பொருட்கள்,
பூஜைப் பொருட்கள் ...

தரமானதும், நியாயமான விலையிலும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியது

TKS Best Food

அன்பான நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!



Rheinische str.79 - 44137 Dortmund

Tel: 0231 950 46 881 Fax:0231 950 46 882


சென்ற ஆண்டு நமது வாடிக்கையாளர்கள் அளித்த மாபெரும் அதரவிற்கு நன்றி
Bochum
முற்பதிவுக்கு முந்துங்கள்
Lucky Fly Reisebüro
என்றும் மலிவான விலையில்
தரமான சேவையை வழங்குவது
Lucky Fly Reisebüro
இந்தியா செல்வதற்கான 1 மாத, 2.மாத, 3.மாத விசாக்கள் பெற்றுத்தரப்படும்
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
எசன் மாநகரில் புதிய கிளை நிறுவனம்.
Altendorfer Str:266
45143 Essen
Germany
Tel: 0201 8009 3749
Mob:No: 0179 1484 892
2017 கோடை கால விடுமுறைக்கான முற்பதிவுக்கு முந்துங்கள்!
Lucky Fly Reisebüro
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Altendorfer Str:266
45143 Essen
Tel: 0201 8009 3749
Mob:No: 0179 1484 892
Graphic Design Vettimaniy Ltd
Lucky Fly Reisebüro
கொழும்பு விமான நிலையத்தில் இருந்து உங்கள் இடத்திற்கு அழைத்துச்செல்ல பிரத்தியேக பிரயாண ஒழுங்கள் (Car,Van, Bus ) செய்து தரப்படும்.
Summer Holidays 2017
air port pickups
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச் சேவை!!!
MoneyGram.
WESTERN UNION WU
moving money for better

Dr.நிரோஷனின்

3 அதிசய உலகம்

## சூரியா அல்லது நயன்தாராவுடன்

# ஒரு திரைப்படத்தில் நடிக்க விருப்பமா?




நீங்கள் ஒரு வாரத்தில் எத்தனைக் கனவுகளைக் காண்பீர்கள்? ஒரு கனவு? இரண்டு கனவுகள்? அல்லது ஐந்து கனவுகளா? நண்பர்களே, உங்களுக்கு ஒன்று தெரியுமா? ஒரு சராசரி மனிதன் ஒரு வாரத்தில் இல்லை, ஒவ்வொரு நாளுமே இரவில் நான்கு முதல் ஆறு கனவுகளைக் காண்கிறான். இதுவே ஒரு வருடத்தில் 1,460 முதல் 2,190 கனவுகள் ஆகிவிடும்.





அதிலும் ஒரு கனவு மட்டும் 5 நிமிடங்களில் இருந்து 30 நிமிடங்கள் வரை நீடிக்குமாம். அட, நீங்கள் எல்லோருமே இப்போது என்ன யோசிக்கின்றீர்கள் என்று எனக்கு நன்றாகவே புரிகின்றது. இது என்னடா, காலையில் எழும்பும் போது ஒரு கனவு கூட நினைவில் இல்லையே அப்படி என்றால் எப்படி ஆறு கனவுகள் வரைக் காண்கிறோம் என்று தானே யோசிக்கின்றீர்கள்?





சரி, இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நீங்கள் 95% முதல் 99% ஆகிய அனைத்துக் கனவுகளையும் உடனடியாக மறந்து விடுவீர்கள் என்பது தான். அதற்குக் காரணம் நீங்கள் காணும் எல்லாக் கனவுகளும் உங்களுக்குச் சுவாரசியமாக இருப்பது இல்லை. எனவே அவை அனைத்தையும் உடனடியாக மறந்து விடுகின்றீர்கள்.

இது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நீங்கள் எல்லோருமே உங்கள் கனவுகளில் பல அடையாளம் தெரியாத நபர்களைக் கண்டிருப்பீர்கள். அந்த அடையாளம் தெரியாத நபர் கூட உண்மையில் நீங்கள் எப்போதாவது உங்கள் வாழ்க்கையில் சந்தித்த ஒருவராகத் தான் இருக்குமாம். கற்பனையிலேயே ஒரு புது முகத்தை நமது மூளை உருவாக்குவதில்லை. அந்த அடையாளம் தெரியாத நபர் பக்கத்து ஊர் மளிகைக் கடையில் வேலை செய்யும் ஒருவராக இருக்கலாம் அல்லது தெருவில் நடந்து திரியும் போது தற்செயலாகப் பார்த்த ஒருவராக இருக்கலாம். எனவே, நமது வாழ்நாளில் நாம் பார்த்த விஷயங்களை வைத்துத்தான் நமது மூளை கனவுகளை உருவாக்குகின்றது.

சரி, நாம் காணும் கனவை நமது மூளை தானாகவே உருவாக்குகின்றது என்று கூறி இருந்தேன், ஆனால் கனவில் நடப்பதை நீங்கள் விரும்பும்படியே மாற்றி அமைக்கமுடியும் என்றால் எப்படி இருக்கும்? நல்லாத் தானே இருக்கும், அல்லவா? நண்பர்களே, உண்மை சொல்லப்போனால் அது கூட முடியும்! தெளிவான கனவு அல்லது ஆங்கிலத்தில் Lucid Dreaming எனக் குறிக்கப்படும் முறையைக் கற்றுக்கொண்டால் உங்கள் கனவுகளுக்கு நீங்களே கதை, வசனம், இயக்கம் மட்டும் செய்யாமல், நீங்களே கதாநாயகனாக ஸ்ரீதிவ்யா முதல் நயன்தாரா அல்லது சூர்யா வரை எல்லோருடனுமே கனவில் ஒரு திரைப்படம் எடுக்கலாம்.
இது எல்லாமே போதாது என்று, இப்போது நீங்கள் மட்டுமே காணக்கூடிய உங்கள் கனவுகளை எதிர்காலத்தில் யூடியூப்பில் (YouTube) கூடப் பதிவேற்றம் பண்ணலாம் என்று விஞ்ஞானம் சொல்கிறது. கலிபோர்னியா பெர்க்லி பல்கலைக்கழகத்தில் (University of California Berkeley) இது தொடர்புடைய ஆராய்ச்சி நடை பெறுகிறது.

சரி சரி, இது எல்லாமே ஒரு பக்கம் இருக்கட்டும். கடைசியாக உங்களுக்கு இன்னுமொரு சுவாரசியமான விஷயத்தைச் சொல்லவா?
12 சதவீதமானவர்கள் தமது கனவுகளைக் கருப்பு வெள்ளையாக (Black & White) தான் காண்கிறார்கள். நம்ப முடிகிறதா…?
இனி நீங்கள் கூறுங்கள், நீங்கள் காணும் கனவு கருப்பு வெள்ளையாக இருக்குமா அல்லது நிறங்கள் கொண்ட கனவாக இருக்குமா?



தொடர்ச்சி 4ம் பக்கம்

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

5ம் பக்கத் தொடர்ச்சி

## அதிசய உலகம்

# இப்பொழுதே மன அழுத்தத்தைப் போக்க வேண்டுமா?

இன்றைய விரைவான உலகில் ஆங்கிலத்தில் stress எனப்படும் மன அழுத்தம் எங்கள் வாழ்வில் சாதாரணமான ஒரு விஷயம் ஆகி விட்டது. கடன், வேலையின்மை, குடும் பத்தில் பிரச்சினைகள், பள்ளியில் பரீட்சை போன்ற வற்றை நமக்கு மன அழுத்தத்தைத் தருகின்றது. ஆனால், இந்த மன அழுத்தம் நம்மையும் நமது உடலையும் பயங்கரமாகப் பாதிக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? அட ஏன், இதனால் நமது உயிருக்கே ஆபத்து இருக் கின்றது என்று சொன்னால் நம்புவீர்களா?



உயிரியல் ரீதியாக மன அழுத்தம் சில வேளைகளில் மிகவும் உபயோகமாக இருக்கும். அது ஏன் என்பதற்கு உங்களுக்கு ஒரு உதாரணத்தைத் தருகிறேன். நீங்கள் ஒரு காட்டில் நடந்து செல்லும் போது ஒரு கரடி உங்களைத் தாக்கினால் என்ன நடக்கும்?


உங்கள் உடல் ஒரு விதமான அழுத்த நிலையை அடைந்துவிடும். உங்கள் இருதயம் வேகமாகத் துடித்து, தசைகள் இறுகி அந்த இடத்தை விட்டு உடனடியாக போவதற்கு உங்கள் உடல் தயாராகிவிடும். எனவே, இப்படி ஆபத்தான நேரங்களில் மன அழுத்தம் நமது உயிரைக் காப்பாற்றுகிறது.



ஆனால், இதே மன அழுத்தம் தினமும் நமது வாழ்க்கையில் வந்துகொண்டே இருந்தால், அதன் விளைவுகள் பயங்கரமாக இருக்க



வாய்ப்புகள் உள்ளன. ஜப்பானில் இதற்குக் கரோஷி (Karoshi) என்று கூட பெயர் வைத்திருக்கிறார்கள். இதன் நேரடி மொழி பெயர்ப்பு „அதிக வேலைப்பளு மரணம்“ ஆகும். மிகவும் ஆரோக்கியமானவர்கள் என்று கருதப் பட்டவர்கள் திடீரென்று மாரடைப்பு அல்லது பக்கவாதம் போன்ற நோய்கள் காரணமாக இறந்து விடுகிறார்கள். இதை அவதானித்தவர்கள் இந்த நோய்களுக்கும் மன அழுத்தத்திற்கும் தொடர்பு இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்தார்கள்.



சரி, மன அழுத்தம் இருக்கும் போது உண்மையில் நமது உடலில் என்ன தான் நடக்கிறது என்பதைப் பார்ப்போமா? பொதுவாக கோர்ட்டிசோல் (Cortisol) எனப்படும் இயக்குநீர் (hormon) தான் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி உடலின் எந்த உறுப்புகளுக்குச் சக்தி தேவையோ அந்த இடங் களுக்குச் சக்தியை அனுப்ப உதவுகிறது. ஆனால், மன அழுத்தம் தொடர்ந்திருந்தால் அதனால் பல பிரச்சினைகள் ஆரம்பித்துவிடும். மனித உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு முற்றி லும் தனது பணியை நிறுத்திவிடும், அத்துடன் வெண்குருதியணுக்களின் (white blood cells) எண்ணிக்கை குறைந்துவிடும், மேலும் நோய்கள் வருவதன் வாய்ப்பு அதிகரித்துவிடும். ஏன், புற்று நோய் வருவதற்குக் கூட வாய்ப்புகள் இருக் கின்றது என்று கூறப்படுகிறது.



அது மட்டும் இல்லை, நமது உடலில் இருக்கும் ஒவ்வொரு உயிரணுவிலும் அடங்கி இருக்கும் ஒவ்வொரு நிறப்புரியின் (chromosome) நுனியிலும் டெலோமீர்ஸ் (telomeres) எனப்படும் ஒரு பகுதி இணைந்திருக்கிறது. இந்த டெலோ மீர்ஸின் அளவு, வயது போகப் போகக் குறைந்துகொண்டே போய் ஒரு கட்டத்தில் முற்றிலும் நீங்கி விடும். அத்துடன் அந்த உயிரணுவும் இறந்துவிடும்.

ஆகவே, அந்த டெலோமீர்ஸ் இல்லாமல் போகும்போது நாமும் இறந்து விடுகிறோம். இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், மன அழுத்தத்திற்கும் இந்த டெலோமீர்ஸின் அளவு குறைவதற்கும் தொடர்பு இருக்கிறது. அழுத்தம் கூடக் கூட டெலோமீர்ஸின் அளவு குறைவதின் வேகமும் அதிகரித்து விடுகிறது.

ஆகவே, மன அழுத்தத்தின் காரணத்தால் நாம் மரணத்தை நோக்கி வேகமாகச் செல்கிறோம்!



## உங்களுக்குப் பிடித்த வர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள்,

ஆனால், பயப்படாதீர்கள் நண்பர்களே! மன அழுத்தம் உருவாக்குவதற்கு ஒரு இயக்குநீர் இருக்கிறது என்றால், அதைக் குறைப்பதற்கும் ஒரு இயக்குநீர் இருக்கத் தானே வேண்டும்? ஆமாம், அப்படி ஒரு இயக்குநீர் இருக்கிறது தான்.

அது வேறு ஒன்றுமே இல்லை, காதல், அன்பு, சந்தோஷம் போன்ற உணர்வுகளுக்குக் கார ணமாக இருக்கும் ஒக்சிடோசின் (Oxytocin) எனும் இயக்குநீர் தான்.

எனவே, மன அழுத்தம் உள்ள நேரம் நீங்கள் உங்களுக்குப் பிடித்த வர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள், அத்துடன் மன அழுத்தமும் குறைந்து நீண்ட காலம் உயிர் வாழலாம்.

இனி நீங்கள் கூறுங்கள் நண்பர்களே, உங்களுக்கு மன அழுத்தம் இருக்கும் பொழுது என்ன செய்வீர்கள்? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்! Dr. Niroshan Thillainathan



# கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்

சேவியர்

4





## இந்தப் புத்தாண்டை மீண்டும் சில வாக்குறுதிகளோடு வரவேற்போம்!

புத்தாண்டு என்றாலே மகிழ்ச்சி தான். புத்தாண்டுக்கு துணி எடுப்போமோ இல்லையோ, வாக்குறுதிகளை எடுக்க மட்டும் நாம மறப்பதே இல்லை.

ஒரு நிமிடம் அப்படியே ரிவைன்ட் பண்ணி கடந்த ஆண்டின் முதல் நாளுக்குப் போவோம். என்னென்ன வாக்குறுதிகள் எடுத்தோம். எப்படியெல்லாம் இந்த ஆண்டு அமைய வேண்டும் என ஆசைப்பட்டோம் ? அந்த கனவுகளெல்லாம் நிறைவேறியிருக்கிறதா ? கொஞ்சமேனும் நிறைவேறியிருக்கிறதா ?

கவலையில்லை. ஒருவேளை உங்களுடைய புத்தாண்டு வாக்குறுதிகள் நாலே நாளில் காலாவதியாகியிருக்கலாம். அல்லது நாலு வாரங்கள் தாக்குப் பிடித்திருக்கலாம். எதுவானாலும் சரி, மீண்டும் ஒரு புதுப்பித்தலுக்குள் நுழைவோம்.
வீழ்தல் தவறல்ல, எழுந்தே ஆகவேண்டும் எனும் உத்வேகம் மனதில் உள்ளவரை.
தவறுதல் தவறல்ல, சரியை நோக்கியே பாதங்கள் பயணிக்கும் வரை.

எனவே இந்த புத்தாண்டையும் சில வாக்குறுதிகளோடு வரவேற்போம்.

1. எந்த செயலைச் செய்தாலும் அதை இறைவன் பார்க்கிறார் எனும் உணர்வுடன் செய்வோம். ஆன்மீக செயல்களை மட்டுமல்லஇ உலகப் பணிகளைக் கூட இறைவனின் பணியாகவே நினைத்து ஆத்மார்த்தமாய் செய்வோம். பணியிடங்களில் நமது நேர்மை, உண்மை, அர்ப்பணிப்பு இவற்றின் மூலம் இறைவனை மகிமைப்படுத்துவோம்.

GTV நிகழ்ச்சிகளை சித்திரம் IP TV யில் பார்த்து மகிழலாம்.

2. நமது ஒவ்வொரு வார்த்தைக்கும் இறைவனிடம் கணக்கு கொடுக்க வேண்டும் எனும் மனநிலையோடு வார்த்தைகளைப் பயன்படுத்துவோம். இறைவன் நம் அருகில் இருந்தால் எப்படிப் பேசுவோமோ,அப்படிப்பட்ட வார்த்தைகளை மட்டுமே பேசுவோம். பிறருக்கு ஊக்கமூட்டும் வார்த்தைகள், ஆறுதல் தரும் வார்த்தைகள்இ வாழ்க்கையைத் தரும் வார்த்தைகள்இ வழிகாட்டும் வார்த்தைகள் இவற்றையே பேசுவோம்.

3. கிசு கிசு பேசவே மாட்டேன் என முடிவெடுப்போம். ஒருவரைப் பற்றிப் பேசவேண்டுமெனில் நல்லதை மட்டுமே பேச முயல்வோம். அல்லதை விடுவோம். அதுவும் முழுமையாய்த் தெரியாத உண்மையைப் பேசுவதை அறவே தவிர்ப்போம்.

4. பேராசை தவிர்ப்போம். “எது இல்லாமல் ஒரு மனிதனால் வாழ முடியுமோ, அது இல்லாமல் வாழ்வதே சிறந்தது“ என சிந்திப்போம். இறைவன் தந்த பொருளாதார எல்லைக்குள் ஆனந்தமாய் வாழ்வோம். அதைத் தாண்டிய ஆசைகள் எல்லாம் நம்மை பாவத்துக்கே அழைத்துச் செல்லும்.

5. வாழ்க்கைத் துணையிடம் அன்பாக நடந்து கொள்வதென முடிவெடுப்போம். இறைவன் தந்த துணையை காயப்படுத்தும் அத்தனை விஷயங்களையும் தவிர்ப்போம். எதிர் தரப்பிலிருந்து காயம் தரும் செயல்கள் வந்தால் கூட இறைமகன் இயேசுவிடம் வலிமை பெற்று துணையை ஆத்மார்தமாய் அன்பு செய்வோம். எந்த விதமான தவறான உறவுகளையும் முளையிலேயே முடித்து வைப்போம்.

6. பெற்றோரைப் போற்றுவோம். அவர்களுடன் தினமும் உரையாடுவது, அவர்களைச் சந்திப்பது, தேவைகளில் உதவுவது என அனைத்து விஷயங்களையும் செய்வோம்.

7. ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படையான குடும்ப செபத்தை தொடர்ந்து செய்வதென முடிவெடுப்போம். காலையிலும், இரவிலும் செபிக்கும் பழக்கத்தை வலுக்கட்டாயமாகவேனும் நமது நடைமுறையாக்குவோம்.இறை வார்த்தைகளை வாசித்து தியானித்து செபிக்கும் இல்லங்கள் இறை ஆசீரில் நிரம்பும். இறைவன் தந்த நாளை அவருடைய வழிகாட்டுதலில் வாழ்வதே சிறப்பானது.

8. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு நபருக்கு ஒரு சின்ன மனிதாபிமான உதவியைச் செய்ய முடிவெடுப்போம். அது பண உதவியாகவோஇ ஆறுதல் வார்த்தையாகவோ, நேரம் செலவிடுவதாகவோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். மனித நேயம் ஒவ்வொரு கணமும் உயிர்ப்புடன் இருக்கட்டும்.

9. சமூக வலைத்தளங்கள், வாட்ஸப், டுவிட்டர் போன்றவை நம் நேரத்தை விழுங்காமல் பார்த்துக் கொள்வோம். குறைந்த நேரத்தை மட்டுமே அதற்கு ஒதுக்கி, மற்ற நேரங்களை பயனுள்ள வகையில் செலவிடுவோம். தேவையற்ற சேட் செயலிகளை அன் இன்ஸ்டால் செய்வோம். வாரம் ஒரு நாள் அதை விட்டு முழுமையாய் விலகியே இருப்போம்.

10. நமது உடல் இறைவனின் ஆலயம். அதையும் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். தவறான பழக்கங்கள் உடல் எனும் ஆலயத்தை அழிக்கும். எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் இதை நான் ஆலயத்தில் வைத்து செய்ய முடியுமா ? என யோசிப்போம். பல விஷயங்கள் விடை பெற்று விடும். உடலை நலமாய் வைத்திருக்க தேவையான உடற்பயிற்சி, சரியான தூக்கம் போன்றவற்றை தொடர்வோம்.

இந்த ஆண்டு நம்மோடு பணம் இல்லாமல் போகலாம், பதவி இல்லாமல் போகலாம், நண்பர்கள் இல்லாமல் போகலாம். ஆனால் ஆண்டவர் இல்லாமல் போகக் கூடாது. இந்த ஒரு சிந்தனையை மட்டும் மனதில் ஆழமாய் எழுதுவோம். இந்த ஆண்டு நமக்கு ஆன்மீக வளங்களைத் தரும் ஆண்டாய் மலரும்.

தொடர்ச்சி 08ம் பக்கம்...



## நிகழ்வின் நிழல்கள்












# நெதர்லாந்து, றோர்மொண்டில் இயங்கும் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றத்தால் நடாத்தப்படும் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா

நெதர்லாந்து, றோர்மொண்டில் இயங்கும் தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றத்தால் நடாத்தப்படும் தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா 12.11.2016ல் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் றோர்மொண்ட் நகரசபை அதிகாரி பெர்டினாண்ட் பிளேட் (Ferdinant Pleyte) அவர்களும், றோர்மொண்ட் சிவசுப்பிரமணியர் ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். இவ் வருடம் நடைபெற்ற அனைத்துலகப் பொதுத்தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும், அதிதிறன், மிகுதிறனில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசுக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன. மாணவர்களால் பல கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

## பார்த்தேன்! ஆனால்! நான் பார்க்கவில்லை - மாதவி




## யாழ்ப்பாணத்தில் எம்.ஜி.ஆர்.

தமிழகத்தில் முதலமைச்சராக வர இருந்த ஒருவர் இலங்கைக்கு வந்தது மக்கள்திலகம் மட்டுமே. நடிகர்திலகம் கூட யாழ்ப்பாணம் வரவில்லை. கொழும்போடு திரும்பியவர். ஆனால் மக்கள்திலகம் தன் இரசிகர்களைக்காண தமிழ் பிரதேசம் எங்கும் சென்றவர்.

1965 ஆண்டு எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். குரும்பசிட்டியில் இருந்து நமக்கு கால் நடை தூரம்தான் பலாலி விமான நிலையம். காலையிலே சென்றுவிட்டோம். எத்தனை மணிக்கு விமானம் வரும் எந்த இலக்க விமானம் ஒன்றும் தெரியாது. கையில் கைத்தொலைபேசி அப்போ இல்லை, நோண்டி நோண்டிப் பார்ப்பதற்கு. அங்கு எமக்கு நோண்டக் கிடைத்தவரோ அங்கு கன்ரினில் வேலை பார்த்த நாகமுத்து மட்டுமே.

அவர் நினைத்தபாட்டுக்கு செய்தி சொல்வார் அது தீயாகப் பரவும். பின் சற்று நேரத்தில் புதுச்செய்தி கிளம்பும். நாம் அங்கு விமான நிலையத்தில் விமானம் நிறுத்த பெரிய கட்டிடம் அமைத்து வந்தனர். ( இன்று வரை அது பூர்த்தியாகவில்லை) அரை வட்டமாக கம்பி கேடர்களால் அது அமைந்திருந்தது. நாம் புத்திசாலிகள் அதில் ஏறி அமர்ந்து கொண்டோம்.

மக்கள் திலகம் வந்தால் நாம் உயரத்தில் இருந்து பார்க்கலாம், என்ற உயர்ந்த எண்ணத்தில். மக்கள் திலகம் வந்து இறங்கி எல்லோருக்கும் கையத்துச் சென்றார். என்று பார்த்தவர்கள் சொன்னார்கள்.

உண்மையில் மேல் இருந்தபடியால் எம்மால் அசைய முடியவில்லை, மற்றவர்கள் மறைக்க, மக்கள் திலகமும் கன்னடத்து பங்கிளியும் பறந்தே சென்றுவிட்டனர். ஆனால் நாம் நண்பர்களுக்கு எல்லாம் பார்த்தாகவே சொல்லிவிட்டோம்.

மறுநாள் வீரகேசரி பார்த்தே வந்ததையும் கண்டு கொண்டோம். பலாலி வீதியில் நின்று இருந்தால்கூட ஒழுங்காப் பாரத்திருக்கலாம் என்ற கவலை இப்பவும் உண்டு. எம். ஜி. ஆர் நல்ல நிறமும் அழகாவும் இருந்தார். ஒரு கையால் சரோஜாதேவியை அணைத்துக் கொண்டு மறுகையால் எல்லோருக்கும் கையசைத்துக் கொண்டு சென்றார். என்று பார்த்தமாதிரி தம்பட்டம் அடித்தோம்.



# செக்ஸ் வேண்டாத இளைய தலை முறை!



**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

என்னவாயிற்று இவர்களுக்கு
செக்ஸ் வேண்டாத இளைய தலை முறை

""பிஞ்சிலை பழுத்திட்டுதுகள். முளைக்க முதல் குஞ்சைப் பிடிச்சுக்கொண்டு திரியிதுகள். கொஞ்சம் வளர்ந்திட்டால் கடற்கரை பார்க் எல்லாம் முகம் உரச நாட்டியம் போடுதுகள். காலம் கெட்டுப் போச்சு". இன்றைய இளைய தலைமுறையினர் பற்றிக் காட்டமாகப் பொரிந்து தள்ளினார் ஒருவர்.
உண்மைதான்.
ஆனால் அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இன்றைய சூழலில் குழந்தைகள் விரைவிலே உடல் வளர்ச்சிடைகிறார்கள். பராயமடைவது முந்தி வருகிறது. கையைச் சூப்பி நிற்கும் காலத்திலேயே வேறெதையோ நாடும் காலமாகிவிட்டது.
உண்மையில் பாலுணர்வும் பாலுறவும் மனித வாழ்விற்கு இன்றியமை யாதனவே. காதல், காமம், புணர்வு, மகப்பேறு - இவை இல்லையேல் உயிரனத்தின் நீட்சி தடைப்பட்டுப் போகும். ஆனால் பாலுறவு ஆனது மகப் பேற்றிற்கானது மாத்திரமல்ல. அதற்கப்பாலும் அதன் மகத்துவம் தொடர் கிறது.
மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சுயமதிப்பை மேம்படுத்துகிறது, பிறர் மீதான அன்பிற்கும் காதலுக்கு வலுவூட்டுகிறது. மிக மகிழ்ச்சியான ஆரோக்கியமான பொழுதுபோக்காகவும் இருக்கிறது.

நெறி தவறி பாலியல் நோய்களைத் தேடிவாங்கும் உறவு பற்றி இங்கு நான் பேசவில்லை. ஆனால் அண்மைய அறிக்கை ஒன்று பாலுறவு விடயத்தில் மனித சமுதாயத்திற்கு சிகப்பு சமிக்கை காட்டுகிறது.


### செயற்பாட்டில் தளர்வு

இன்றைய இளைய சமுதாயத்தினர் பாலுறவில் ஈடுபடுவது படிப்படியாக் குறைந்து வருகிறதாம். முந்தைய தலைமுறையினரோடு ஒப்பிடும்போது இன்றைய தலைமுறையினர் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே செயலில் இறங்குகிறார்களாம். பார்க்கிறார்கள் பேசுகிறார்கள் ஆபாசமாகக் கிண்டலும் அடிக்கிறார்கள். வெளிப்படையாகக் கிலேசேமின்றி அது பற்றி கலந்துரையாடவும் செய்கிறார்கள்.

### ஆனால் அதற்கு அப்பால் ..?

பிரித்தானியாவில் செய்யப்பட்ட "வாழ்க்கை முறை மற்றும் பாலியல் மனப்பான்மை தொடர்பான கருத்து" ஆய்வில் இது கண்டறியப்பட்டது. ஆய்வைச் செய்தவர்கள் ருளைநசளவைல College London ஆகும்.
16 முதல் 44 வயதுள்ளோர் உடலுறவில் ஈடுபடுவது கடந்த இரு தசாப்தங்களாகக் குறைந்து வருகிறதாம். இப்பொழுது பெண்கள் சராசரியாக மாதத்தில் 4.8 தடவையும் ஆண்கள் சராசரியாக 4.9 தடவைகளும் ஈடுபடுகிறார்களாம். பத்து வருடங்களுக்கு முன் இது முறைப்படி 6.3 ம், 6.2 ம் ஆக இருந்ததாம். அதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இதுவே முறையே 6.1ம் 6.4 லும் ஆக இருந்திருக்கிறது.

சரி முதியவர்கள் என்ன செய்கிறார்கள்?. முதியவர்கள் எனும்போது 65 முதல் 74 வயதானவர்களை இங்கு குறிக்கிறது. "தேவாரம் திருவாசகம் ஜபம் தியானம், ஸ்தோத்திரம் என முக்திக்கு வழி தேடிக்கொண்டிருப்பார்கள்" என நினைக்கிறீர்களா?




இல்லை. அவர்களும் பாலுறவு வைக்கிறார்கள். வயதான பெண்கள் சராசரியாக மாதத்தில் 1.4 தடவையும் ஆண்கள் சராசரியாக 2.3 தடவை களும் ஈடுபடுகிறார்களாம். அவர்கள் வயதிற்கு அது போதுமானதாக இருக் கலாம். முந்தைய தசாப்தங்களில் அவர்களது செயற்பாடு பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

### காரணங்கள் என்ன?

இன்றைய இளைய சமூதாயத்தினர் பாலுறவில் ஈடுபடும் எண்ணிக்கை குறைந்து செல்வதற்கு காரணம் என்ன?

நவயுகத்தின் அவசரமும், நேரமின்மையும் பன்முகமான சமூக ஈடுபாடுகளும் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள். தொழிலைத் தக்கவைத்திருக்க வேண்டியுள்ளது. பணத்தின் தேவைக்கு எல்லையே அற்றுப் போய்விட்டது. இதனால் ஏனையவற்றில் ஈடுபடுதல் குறைந்திருக்கலாம்.

### அடுத்த காரணம் நவீன தொழில் நுட்ப வசதிகளாகும்.

ஒருவரில் ஒருவர் ஈடுபாடுள்ள இளைஞனையும் யுவதியையும் ஒரு அறையில் அடைத்து வைத்தால் என்ன நடக்கும்? கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து .... எல்லாம் நடக்கும். ஆனால் அந்த அறையிலேயே இணைய வசதியுடன் ஐபாட் அல்லது டப்லட் கிடைத்தால் நிலமை தலைகீழாக மாறிவிடும்.



டக் எனக் கிளிக் பண்ணி ஈ மெயிலை அல்லது மெசேஜைப் பார்ப்பார்கள். தனிப்பட்ட செய்திகள் முதல் உலக நிலவரங்கள் வரை எதையும் தான் தப்பவிட்டு விடக் கூடாது என்ற என்ற ஆழ்மன உந்துதல் காரணமாகும். ஆம் இணைய வசதி மனிதர்களின் வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டது.
இப்பொழுது பாலுறவு கொண்டால் எவற்றையெல்லாம் இணையத்தில் இழக்க நேரிடும். தப்பவிடக் கூடாதவற்றைக் கவனித்துவிட்டு சற்று நேரம் தள்ளி உறவு கொள்ளலாமா என்று பலர் யோசிக்கும் அளவிற்கு நவீன தொடர்பு சாதன வசதிகள் மனித வாழ்விற்குள் ஆழ ஊடுருவிவிட்டன.

தொடர்ச்சி 11ம் பக்கம்...





Gopara Gnanam
Textiles & Jewellery Shop
எம்.ஜி.ஆர்
வது
பிறந்தநாள் மற்றும் எமது நிறுவனத்தின்
9வது ஆண்டுவிழாவை முன்னிட்டும்
மாபெரும் மலிவு விற்பனை!
21.01.2017 சனிக்கிழமை
(17.01.1917-17.01.2017)
One day Sale
21.01.2017
Saturday
பிரியாணி மதிய உணவு
கடை முன்றலில்!
Briyani free Lunch
11:00-14:00
500 € கல்யாணப் புடவை
வாங்குபவர்களுக்கு
100 அன்பளிப்புப் பொருட்கள்
இலவசம்!
Buy one
get one free
get two free
போன்ற அசத்தலான
அதிரடி Sale!
Gopara Gnanam
ESTD 1992
GMBH
Rheinische Str. 81- 44137 Dortmund
Tel: 0231/5450028
Mob:01713306542

09 பக்கத் தொடர்ச்சி **செக்ஸ் வேண்டாத இளைய தலை முறை!**



பேஸ்புக், வட்ஸ்அப், ருவீட்டர் போன்றவை எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் மனித உறவுகளை உள்ளங்கையிற்குள் நெருங்கிக் கொண்டு வருவது உண்மைதான். ஆனால் தத்தமது கணனிகளுக்குள்ளும் ஐபாட்களிலும் மூழ்கிக் கிடப்பதால் அருகில் இருக்கும் சகமனிதர்களுடனான உறவுகளில் பாரிய விரிசலை ஏற்படுத்தி விடுகின்றன.
இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக் காட்டலாம். பாலியல் இன்று மறைபொருளாக இல்லை. வெளிப்படையாகப் பேசப்படுகிறது. மேலை நாட்டு ரீவீ சனல்களில் (Girls,This is England) மட்டுமின்றி நீயா நானா போன்ற வற்றில் கூட பேசப்படுகிறது. ஒரு காலத்தில் பேசக் கூசப்பட்ட விடயங்களான (LGBT - lesbian, gay, bisexual, and transgender) இப்பொழுது அலசி ஆராயப்படுகின்றன. கள்ளத் தொடுப்புகள் வெளிப் படையாக விவாதிக்கப்படுகின்றன.

## உணர்சியை முந்தும் அறிவியல்

பாலுறவு விடயத்தில் முற்காலத்தில் இருந்த ஒளிவு மறைவு, இரகசியத்தன்மை, பரஸ்பர அந்நியோன்யம் போன்றவை இன்று இல்லாமல் போய்விட்டது. அதிலிருந்த கள்ள நாட்டம் காணாதொழிந்துவிட்டது.

மறுவார்த்தையில் சொல்வதானால் பாலுறவு என்பது உணர்வு சார்ந்ததாக இருந்தமை குறைந்து அதில் அறிவியல் அம்சம் மேலோங்கி வருகுகிறது என்று சொல்லலாம். இவையும் பாலுறுவில் நாட்டம் குறைவதற்கு காரணமாகலாம். மிகையான எதிர்பார்ப்புகளும், அதீத சிந்தனைகளும் முன்பு வெளிப் படையாகப் பேசத் தயங்கிய விடயத்தை கூறுபோட்டு பகுத்தறிய விளையும் அறிவியல் தேடல்களும், செயலூகத்தைப் பின்தள்ளிவிட்டது.

"காமம் பாலுணர்வு புணர்தல் போன்ற செயற்பாடுகள் உயிரனத்தின் அடிப்படையான மிருக இயல்பு ஆகும். மனிதன் கூர்ப்பில் மிகவும் மூத்த உயிரினம். தனது மூளைத்திறனினல் தங்கியிருப்பவன் கீழே மறைந்து கிடக்கும் அசிங்கத்தை நாடுவது அவனது அறிவாற்றலுக்கு இழுக்கு" போன்றதான மறைமுக உணர்வும் இளைய சமுதாயத்தில் மேலோங்கி வருகிறது. இவையும் அவர்களது பாலியல் செயற்பாட்டை பின்தள்ளுவதாகக் கொள்ளலாம்
காலையில் நல்லதா, கும்மிருட்டில் நல்லதா, மேலேயா கீழேயா உச்சம் கிடைக்கும், கண்களை மூடியிருப்பதா, விழித்திருப்பதா, கால்களை அகட்டி வைப்பதா ஒடுக்குவதா? இவை போன்ற கேள்விகளுக்கான விடைகளை இணையத்தில் தேடுவதும், டம்ளரிலும் ருவீட்டரிலும் நண்பர்களிடம் விவாதிப்பதுமாக இருப்பார்கள். பாலுறவுச் செயற்பாடு பற்றிய மனப் பதற்றதைக் இவை கிளறிவிடுகின்றன. எல்லாவற்றையும் சரிசெய்துகொண்டு 100 சதவிகித பெறுபேறு கிட்டக் கூடிய நிலையில்தான் உடலால் சுகிக்க வேண்டும் என எண்ணினால் அது நடக்கக் கூடிய காரிணமா?

எனவேதான் மனிதனின் இயல்பான உயிரியல் செயற்பாடுகளை அறிவியல் ரீதியாக நுணிகி ஆயப் புகுவது தோல்வியிலேயே முடிகிறது. இன்னொரு சகமனிதரிலிருந்து பெறக் கூடிய இன்பங்கள் எவை என்பதையும், அவற்றின் பலாபலன்களையும், அதை எப்படிச் செய்தால் தனக்கும் மற்றவருக்கும் பூரண திருப்தி கிட்டும் என்பதை இணைங்களில் தேடிக்கொண்டிருந்தால் கணனி யோடும் ஐபாட்டோடும் புணருவதல்தான் முடியும்.
மொத்தத்தில் பார்த்தால் இன்றைய இளைய தலைமுறையியனர் செக்ஸ் பற்றி அதிகமாகவே சிந்திக்கின்றனர். ஆனால் வேலையால் வீடு திரும்பியதும் ரீவீ பார்க்கிறார்கள், இணையத்தில் மூழ்குகிறார்கள். எல்லாம் முடிய கண்கள் சுழல சோர்ந்து படுத்துவிடுகிறார்கள். நேரமிருந்தால் மட்டுமே செக்ஸ் உறவு என்றாகிவிடுகிறது.

## ஆய்வு தெளிவுறுத்தும் வேறு விடயங்கள்


பிரித்தானியாவில் செய்யப்பட்ட ஆய்வானது இளைஞர்களது பாலியல் நாட்டம் பற்றி மட்டுமின்றி, ஒட்டுமொத்த சமூகத்தின் பாலியல் சம்பந்தமான வேறு பல விடயங்களையும் சுட்டிக் காட்டுகிறது.

மிக இளவயதிலேயே ஆரம்பித்துவிடும் செக்ஸ் உறவுகள் முதுமையிலும் (74வயது) தொடர்கிறது

தன்னினச் சேர்க்கையை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்து வருகிறது. அதே நேரம் திருமணத்திற்கு அப்பாலான பாலுறவை ஏற்கும் தன்மை குறைந்துவருகிறது.

பாலியல் உறவுப் பிரச்சனைகள் இருபாலாரிலும் 10 ல் 4 பேருக்கு இருக்கிறதாம். இருந்தபோதும், 10ல் ஒருவரே அதனால் கவலைப்படுவ தாகவோ மனஉழைச்சலுக்கு ஆளாவதாகவோ கூறினார்கள். பாலுறவில் நாட்டமின்மையையே 15 சதவிகிதமானவர்களின் முக்கிய பிரச்சனை இருந்திருக்கிறது. அதிலும் பெண்கள் ஆண்களை விட இரு மடங்காக பாலுறவு நாட்டமற்றுக் காணப்பட்டார்கள்.

விருப்பதிற்கு மாறாக உடலுறவு வைக்க வேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டு இருந்திருக்கிறது. பெண்கள் அதிக பாதிப்பிற்கு ஆளான போதும் ஆண்களும் தப்பவில்லை. 10 பெண்களில் ஒருவர் இஷ்டமின்றி உடலுறுவு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த அதே நேரம், 70 ஆண்களில் ஒருவருக்கு அத்தகைய நிலை ஏற்பட்டதாம். எந்தப் பெண்ணைக் கண்டாலும் புணரும் வேட்கையோடு திரியும் எமது சமூகச் சூழலோடு ஒப்பிடும்போது இத்தகவல் ஆச்சரியம் அளிக்கிறது.



பிரித்தானியாவில் ஏற்படும் கருத்தங்கல்களில் ஆறில் ஒரு பங்கு எதிர்பாராததாக (திட்டமிடப்படாததாக) இருக்கிறது. மற்றொரு விதத்தில் பார்த்தால் 60 பெண்களில் ஒருவர் எதிர்பாராதவிதமாக கருத்தங்கலுக்கு ஆளாகிறார்கள். கருக்கலைப்பு சட்டபூர்வமாக இருக்கும் பிரித்தானியாவில் இது பாரிய சிக்கலை ஏற்படுத்தாது.
ஆனால் மதம் புனிதத்துவம் கண்ணியம் எனப் மேடைக்கு மேடை பேசிக் கொண்டு இருளில் பெண்களைக் குதறி எடுக்கும் நம்நாட்டில் சட்டவிரோத கருக்கலைப்புகளால் பலியாகும் பெண்களின் எண்ணிக்கை தூய்மை வாதிகளின் கண்ணில் படுவதில்லை. சிறுவர் துஸ்பிரயோகம் பாலியல் வன்புணர்வு போன்றவற்றால் கர்ப்பமுறும் பெண்களின் துயரம் கவனத்தில் கொள்ளப்படாத ஒரே புனித பூமி சிறிலங்காவாத்தான் இருக்கும்.

நன்றி :ஹாய் நலமா




# புழங்கு பொருட்கள்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா





ஆட்டுக்கல் அம்மி திரிகை (திரிகல்)

## மூக்குப்பேணி

யாழ்ப்பாணத்து பொருளியற் பண்பாட்டோடு மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த புழங்கு பொருட்பயன்பாடுகள் மிகவும் முக்கியமானவை. புழங்கு பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்கள் என்றும் கூறுவர். "பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள்" என்று பண்பாட்டு ஆய்வாளர்கள் கூறுவர். யாழ்ப்பாணத்திலே பயன்படுத்தப்பட்ட புழங்கு பொருட்கள் இப்பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

புழங்குபொருட் பண்பாட்டினை பின்வரும் இரண்டு தளங்களில் நோக்கலாம். 1.சிறுகைத்தொழில் வகுப்பினரின் பொருளியல் சார்ந்தது. 2.புழங்குபொருட் பாவனையாளர்களைச் சார்ந்தது.

புழங்கு பொருள் உற்பத்தியாளர்கள் தமக்கு வருமானம் ஈட்டித் தரும் தொழிலாக மாத்திரம் செய்யாது. தமதும் பாவனையாளர்களினதும் அழகியல் உணர்வுகளையும் அதிலே பயன்படுத்தியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

### பனம் பொருட்களாலானவை

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பனம் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் புழங்கு பொருட்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. பனையோலையாற் செய்யப்படும் புழங்கு பொருட்களைப் பட்டியலிடுவது நமது நோக்கமன்று. பனையோலையாற் செய்யப்பட்ட புழங்கு பொருட்கள் சிலவற்றைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பதிவு செய்துள்ளமையை இங்கே சுட்டிக்காட்டலாம்.

அழகுறு வன்னம் அமைவுறப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையோடிழைத்து
பெட்டி, பாய், குட்டான், பெயர்பெறு கதிர்ப்பாய்
அடுக்குப் பெட்டியும் அருவிலை மூடலும்
பிட்டவி நீத்துப் பெட்டியும் சுண்டும்
பனையின் குருத்தைப் பதனமாய் வார்ந்து
பன்னிறந் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் விளையர் கருதி யிழைத்த
ஆனைப் பெட்டியு மழகிய தேரும்
கொட்டைப் பெட்டியுங் கிலுக்குப் பெட்டியும்...



மேலே குறிப்பிட்டவற்றுள் இடம்பெறும் பலபொருட்கள் இன்று பயன்பாட்டில் இல்லை. உதாரணமாகக் "கொட்டைப்பெட்டி" என்பதை இன்றைய தலைமுறையினரிற் பலர் அறிய மாட்டார்கள். ஒரு காலத்தில் பல்வேறு பாவனைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட "உமல்" என்பது இன்று பயன்பாட்டில் இல்லை. 19ஆம் நூற்றாண்டிலே மிஷனரிமார் எழுதிவெளியிட்ட "பாலபோதம்" என்னும் பாடப்புத்தகத்தில் "உமலின்" பயன்பாடு பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்

### உலோகத்தாலானவை

உலோகத் தொழிலைப் பொறுத்தவரையில் விவசாயத்திற்கும் வீட்டுப் பாவனைக்குமுரிய உபகரணங்கள் இரும்பினாற் செய்யப்பட்டன. கத்தி, (கத்தி இவற்றிற்பலவகை : வெட்டுக்கத்தி, கொடுவாக்கத்தி, கைக்கத்தி, கோப்பிக்கத்தி, வில்லுக்கத்தி முதலானவை), கோடரி (கைக்கோடரி என்பது சிறிய கோடரி, கோடரியைக் கோடாவி என்றே அழைப்பர்), சத்தகம் (காம்புச்சத்தகம், கொக்கைச் சத்தகம் முதலானவை), மண்வெட்டி (சாதாரண மண்வெட்டி, தோட்டமண்வெட்டி, சோழியன் மண்வெட்டி), பாக்குவெட்டி, அரிவாள், கலப்பைக்கொழு, குத்தூசி, எழுத்தாணி முதலியன இங்குள்ள கைவினைக் கலைஞர்களாற் செய்யப்பட்டன. இவற்றின் தரத்திலும் அமைப்பிலும் அழகியலோடு ஒட்டித் தமது நுட்பமான தொழிற் திறன்களையும் வெளிக்காட்டினர்.



செம்பு, பித்தளை, வெள்ளிப் புழங்கு பொருட்களும் சமய கரணத்தோடு தொடர்புடைய பயன்பாட்டுப் பொருட்களும் செய்யப்பட்டன. தாம்பாளம் (தட்டம்), விளக்கு, வட்டில், வெற்றிலைத் தட்டு மூக்குப்பேணி முதலான உலோகப் பொருட்களிலே அழகியல் அமிசம் சிறப்பாகப் பேணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



பொன், வெள்ளி முதலியவைகளில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஆபரணங்களைப் பொன்வினைக் கலைஞர்கள் செய்தமை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். யாழ்ப்பாணத்து கைவினைக் கலைஞர்கள் பற்றி பல்டேயஸ் குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக்கு உரியது.

நன்றி: நூல் யாழ்ப்பாணப் பண்பாடு
மறந்தவையும் மறைந்தவையும்

தொடரும்



வைரமுத்து



# ஒரே ஒரு எம்.ஜி.ஆர் தான் !

ஒரு நாளும் உங்களை நான் தேடி வந்து சந்தித்ததில்லை. ஆனால், அந்த ஒரு கறுப்புப் பகலில் மட்டும் உங்களை ஓடிவந்து பார்க்காமல் என்னால் உட்கார முடியவில்லை.ராஜாஜி மண்டபத்தில் உங்கள் இறுதிப் படுக்கையில் ரோஜா மாலைகளுக்கு மத்தியில் ஒரு ரோஜா மலையாய்க் கிடத்தப்பட்டிருந்தீர்கள்.(24.12.1987)

உங்களைத் தொட்டுப் பார்க்க நினைத்து, தொட முடிந்த தூரம் வந்தும் தொட முடியாமல் நின்றேன்.
எம்.ஜி.ஆருக்கே மரணமா?

எனக்கு முதலில் மரணப்பயம் வந்தது.
காற்று - சமுத்திரம் - வானம் - எம்.ஜி.ஆர்
இவைகளெல்லாம் மரணிக்க முடியாத சமாசாரங்கள் என்று எங்கள் கிராமத்து மக்களைப் போலவே நானும் நம்பிக்கிடந்த நாட்களுண்டு.
அன்று அந்த நான்காவது நம்பிக்கை நசிந்து விட்டது.
47 முதல் 87 வரை நாற்பதாண்டு காலம் தமிழர்கள் உச்சரிக்கும் ஐம்பது வார்த்தைகளில் ஒரு வார்த்தையாய் இருந்த பெயரை மரணத்தின் மாயக்கரம் அழித்துவிட்டதா?
இமைக்காமல் கிடந்த உங்களை இமைக்காமல் பார்த்தேன்.
நீண்டநேரம் என்னை அங்கே நிற்க அனுமதிக்கவில்லை.
ஜனத்திரள் என்னைப் பிதுக்கியது.





சட்டென்று நகர்ந்து ராஜாஜி ஹாலின் ராட்சதத் தூண் ஒன்றை அடைக்கலம் பற்றி, கூட்டத்தை நோட்டமிட்டேன். அங்கங்கே அரசாங்க விதிகளுக்கு உட்பட்டுச் சிலர் அழுது கொண்டிருந்தார்கள். நிஜக்கண்ணீர் வடித்தவர் பலர்' நீலிக்கண்ணீர் வடித்தவர் சிலர். வருத்தக் கண்ணீர் வடித்தவர் பலர்.
வாடகைக் கண்ணீர் வடித்தவர் சிலர். உயிரைக் கண்ணீராய் ஒழுக விட்டவர் பலர்' மிகப் பலர்.
என்னால் அழ முடியவில்லை.
அழுகை வரவில்லை.
மனிதல் மட்டும் சோகப் பனிமுட்டம்.

"நான் ரசித்துக் காதலித்த ராஜகுமாரா ! உனக்கா மரணம்?"என்று உதட்டுக்குத் தெரியாமல் நாக்கு உச்சரித்துக் கொண்டது.

அங்கே கூடியிருந்த அரசியல்வாதிகளில் பலர் நாளைகளைப் பற்றியே தர்க்கித்துக் கொண்டிருக்க- நானோ உங்கள் நேற்றுகளை நினைத்தே விக்கித்துக் கொண்டிருந்தேன்.

கண்டியோ வடவனூரோ எங்ககேயோ பிறந்தீர்கள்' தமிழ்நாட்டுக்குள் பிழைக்க வந்தீர்கள்' தமிழ்நாட்டில் பல பேரைப் பிழைக்க வைத்தீர்கள். கும்பகோணம் யானையடிப் பள்ளி வறுமையில் கழிந்த வால்டாக்ஸ் ரோடு முகம் பார்க்க முடியாமல் முதல் மனைவியின் மரணம் - கோடையில் எப்போதாவது படபட வென்று பொழிந்து ஏமாற்றிவிட்டுப்போகும் மேகம் மாதிரி படவுலகில் அவ்வப்போது சின்னச்சின்ன வாய்ப்புகள்.

ஒரே ஒரு"க்ளோஸ்-அப்" போடக்கூடாதா என்று மூத்த இயக்குனர்களிடம் முறையீடு - கதருக்குள் இருந்து கொண்டு கலைஞர் மீது காதல் - வந்து சேர்ந்த வாய்ப்புகளைச் சிதறாமல் பயன்படுத்திக் கொண்ட செம்மை - முப்பது வயதுக்கு மேல் வாழ்க்கையில் சந்திரோதயம், நாற்பதுக்கு மேல் சூரியோதயம் - படபடவென்று வளர்ச்சி - மனிதநேயம் என்னும் மாட்சி காட்சியிலிருந்து கட்சி - கட்சியிலிருந்து ஆட்சி - அப்பப்பா என்ன வளர்ச்சி உங்கள் வளர்ச்சி !

அயல் வீட்டுக்காரருக்கு அறிமுகமில்லாத ஒரு வாழ்க்கையோடு தொடக்கமானீர்கள் அரசாங்க மரியாதையோடு அடக்கமானீர்கள்.

அன்று கடைசிப் படுக்கையில் உங்களைக் கண்டபோது - ஒரு சரித்திரம் சரிந்து கிடக்கிறது என்று நினைத்தேன். ஓர் அபூர்வம் முடிந்துவிட்டது என்று நினைத்தேன்.
ஒன்றன் பின் ஒன்றாய் ஞாபக மேகங்கள் .......
இருபது வயதில் என்னைத் தூங்கவிடாமல் செய்தது காதல்'
எட்டு வயதில் என்னைத் தூங்கவிடாமல் செய்தவர் நீங்கள்.
கதைகளிலும் கனவுகளிலும் நான் கற்பனை செய்து வைத்திருந்த ராஜகுமாரன் நீங்கள் தான் என்று நினைத்தேன்.
உங்களின் இரட்டை நாடியின் பள்ளத் தாக்கில் குடியிருந்தேன்.
உங்கள் முகத்தின் மீது மீசைவைத்த நிலா என்று ஆசை வைத்தேன்.

நீங்கள் புன்னகை சிந்தும் போது நான் வழிந்தேன். வாள் வீச்சில் வசமிழந்தேன். உங்கள் பாடல்களில் நானும் ஒரு வார்த்தையுமாய்' நானும் ஒரு வாத்தியமாய் ஆனேன்.
ஒரு தாளம் கட்டுமானத்தில் சிரிக்கும் உங்கள் சங்கீதச் சிரிப்பில் வார்த்தைகளில் பிசிறடிக்காத உங்கள் வசன உச்சரிப்பில் நான் கரைந்து போனேன்.
பெரியகுளம் ரஹீம் டாக்கீஸில் "நாடோடி மன்னன்"பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து, தூக்கத்தைத் தொலைத்துவிட்டு, சுவரில் நசுக்கப்பட்ட மூட்டைப் பூச்சிகளின் ரத்தக் கோடுகளை அந்தப் படத்தில் வரும் கயிற்றுப் பாலமாய்க் கற்பனை செய்து கொண்டு விடிய விடிய விழித்திருக்கிறேன்.

"மன்னனல்ல மார்த்தாண்டன"என்று உங்களைப் போல் மூக்கில் சைகை செய்யப் போய் சுட்டுவிரல் நகம்பட்டு சில்லி மூக்கு உடைந்திருக்கிறேன்.
பிரமிக்க மட்டுமே தெரிந்த அந்தப் பிஞ்சு வயதில் எனக்குள் கனவுகளைப் பெருகவிட்டதிலும் கற்பனைகளைத் திருகிவிட்டதிலும் உங்கள் ராஜாராணிக் கதைகளுக்குப் பெரும்பங்கு உண்டு என்பதை நான் ரகசியமாய் வைக்க விரும்பவில்லை.
நூறு சரித்திரப் புத்தகங்கள் ஏற்படுத்த முடிந்த கிளர்ச்சியை உங்கள் ஒரே ஒரு படம் எனக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த பாதிப்பு எனக்கு மட்டும் இல்லை. குடை பிடித்துக் கொண்டவர்களையும் எங்கோ ஓர் ஓரத்தில் நனைந்துவிடுகிற அடைமழை மாதிரி உங்களை விமர்சித்தவர்களைக் கூட ஏதேனும் ஒரு பொழுதில் நாசூக்காக நனைத்தே இருக்கிறீர்கள்.

தொடர்ச்சி 15 ம் பக்கம்



## குடியிருந்த கோயில்

03 ம் பக்க தொடர்ச்சி....



முதியோர் இல்லத்தின் முற்றங்களில் அவர்களின் அன்பை புதைக்காதீர்கள்.

தன் மழலையின் பாதம் பூமிக் காற்றை முத்தமிடும் போது வலிமையாய் இருக்க வேண்டுமென்றே அன்னை ஆசிக்கிறாள். அதற்காகவே அத்தனை வலிகளையும் வலிமையாய்த் தாங்கிக் கொள்கிறாள். பதிலுக்கு அவள் எதிர்பார்ப்பது அன்பை மட்டுமே !

குழந்தையின் முதல் அழுகை, அன்னையின் தேசிய கீதம். பிந்தைய அழுகைகள் அன்னையின் துடிப்பின் கணங்கள். முதல் புன்னகை அன்னையின் பரவச தேசம். தொடரும் புன்னகைகள் பரவச தேசத்தின் பளிங்கு மாளிகைகள். ஏழு கடல் ஏழு மலை தாண்டி கிளியின் உடலில் உயிரை வைக்கும் மந்திரவாதியைப் போல, தனது உயிரை அள்ளி குழந்தையின் உடலில் வைத்து உலவ விடுகிறாள் அன்னை.

அந்தக் குழந்தையின் வளர்ச்சி தான், அவளுடைய மகிழ்ச்சி. அந்த குழந்தையின் வெற்றி தான் அவளுடைய வெற்றி. அந்தக் குழந்தையின் புன்னகை தான் அன்னையின் புன்னகை. அந்தக் குழந்தையின் கண்ணீர் தான் அன்னையின் அழுகை. ஜீவனோடு கசிந்துருகி இரண்டறக் கலந்து இளைப்பாறுவாள் அன்னை. பதிலுக்கு அவள் எதிர்பார்ப்பது அன்பை மட்டுமே !

பால்யப் பருவத்தில் தோளில் தாங்கி, பதின் வயதுப் பருவத்தில் நெஞ்சில் தாங்கி, இளைய பருவத்தில் இதயத்தில் தாங்கி, மரணம் வரைக்கும் உயிரில் தாங்குவாள் அன்னை. குயவன் ஒரு பாண்டத்தைச் செய்வது போல அன்னை ஒரு குழந்தையை வனைகிறாள். குயவன் மண்ணினால் வனைகிறான், அன்னையோ தன்னையே குழைத்து வனைகிறாள்.

அத்தகைய அன்னையைத் தொழுதும், இதயத்தில் அவளைத் தாங்கியும் வாழும் பிள்ளைகள் வாழ்க்கையில் உயரிய நிலைகளில் இருக்கிறார்கள். தன்னை அடிக்கும் மகனைக் கூட, "சாப்பிட்டுப் போடா ராசா" என கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சொல்லும் அன்னையின் மனம் வேறு எங்கும் காணக் கிடைக்காதது !

அன்னையை அன்பு செய்வது பிள்ளைகளுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய ஆனந்த வாய்ப்பு. அன்னையின் முகத்தில் புன்னகையை வரவழைக்கும் பிள்ளைகள் வாழ்வின் உன்னத நிலைகளை அடைகின்றனர். அன்னையின் தலைகோதும் விரல்களுடன் வாழும் பிள்ளைகள் ஆசீர்வாதங்களோடு வாழ்கின்றனர், தொலைவில் இருந்தால் தினமும் தொலைபேசியிலேனும் அவர்களுடன் பேசுங்கள். வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள்வீர்கள்.

அன்னையைப் போற்றுங்கள். அவர்கள் இல்லையேல் இந்த பூமியில் உங்கள் முதல் மூச்சு விழுந்திருக்காது ! அன்னையைப் போற்றுங்கள், அவர்கள் இல்லையேல் இந்த பூமியில் உங்கள் முதல் குரல் ஒலித்திருக்காது ! அன்னையைப் போற்றுங்கள், அவர்கள் இல்லையேல் அன்பின் பொருள் உங்களுக்குப் புரிந்திருக்காது !

அன்னையைப் போற்றுங்கள், அவர்கள் இல்லையேல் தியாகத்தின் வடிவம் உங்களுக்கு விளங்கியிருக்காது !

உங்கள் பெற்றோரை உங்கள் அன்பின் வளையத்திலேயே வைத்திருங்கள். உங்கள் பெற்றோருக்கு நீங்கள் செய்யும் அதிகபட்ச அன்பு அது தான். முதிர் வயதில் அவர்களுடைய பேச்சை அருகமர்ந்து கேளுங்கள், நீங்கள் செய்யும் அதிகபட்ச மரியாதை அது தான். அவர்கள் கரங்களைக் கோர்த்துக் கொண்டு அமைதியாய் அமர்ந்திருங்கள், நீங்கள் அளிக்கும் அதிகபட்ச நிம்மதி அது தான்.

அவர்கள் வேண்டுவதெல்லாம் உங்களுடைய ஆறிலக்க வருமானமல்ல, ஆறுதலான வார்த்தைகள் தான். முதியோர் இல்லத்தின் முற்றங்களில் அவர்களின் அன்பை புதைக்காதீர்கள். நிராகரிப்பின் வீதிகளில் அவர்களுடைய நேசத்தை அவமதிக்காதீர்கள்.

பூமியில் உங்கள் வாழ்க்கை வளமானதாகவும், ஆயுள் நீளமானதாகவும் இருக்க பெற்றோரை அன்பு செலுத்துங்கள்.

**அன்னையை நேசிப்போம்**
**வாழ்க்கை அர்த்தம் பெறும்.**




13ம் பக்க தொடர்ச்சி.... ஒரே ஒரு எம்.ஜி.ஆர் தான்

என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கிறேன். நீங்கள் மந்திரத்தால் மாங்காயோ தந்திரத்தால் தேங்காயோ தருவித்தவரில்லை. வரலாற்று ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அகழ்ந்து பார்த்தால் மட்டுமே உங்கள் வெற்றியின் வேர்களை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த மண்ணில் எங்கள் மனிதர்கள் சில நூற்றாண்டுகளாக எதை இழந்துவிட்டு நின்றார்களோ அதையே நீங்கள் தோண்டி எடுத்துத் துடைத்துக் கொடுத்தீர்கள் விறுவிறுப்பாய் விலைபோயிற்று.



"முருகன் துணை"

நீங்கள் கனவுகளைத்தான் வளர்த்தீர்கள் ஆனால் கனவுகள் தேவைப்பட்டன.
வீராங்கன், உதயசூரியன், கரிகாலன், மணிவண்ணன், மாமல்லன் என்றெல்லாம் நீங்கள் பெயர்சூட்டிக் கொண்டபோது தமிழன் தன் இறந்தகால பிம்பங்களைத் தரிசித்தான்.
நீங்கள் கட்டிப்பிடித்து கானம் படித்துக் காதலித்தபோது தமிழன் புதைந்து போன காதல் பண்பைப் புதுப்படித்துக் கொண்டான்.
உங்கள் தாய்மொழி மலையாளம் என்பதை மறக்கடிப்பதற்கும் நீங்கள் தமிழ்க் கலாச்சாரத்தில் கரைந்து போனவர் என்று காட்டிக் கொள்வதற்கும் நீங்கள் எடுத்த முயற்சிகள் முழு வெற்றி பெற்றன.
மலையாள மரபுப்படித் தாயார் பெயரைத் தான் இனிஷியலாகக் கொள்வார்கள். ஆனால் நீங்களோ தமிழ் மரபுப் படி தந்தை பெயரைத்தான் இனிஷிலாகக் கொண்டீர்கள். உங்கள் தமிழ் உச்சரிப்பின் எந்த ஒரு வார்த்தையிலும் மலையாளத்தின் பிசிறு ஒட்டாமல் சுத்தமாய்த் துடைத்தெடுத்தீர்கள்.

**"மருதநாட்டு இளவரசி"யின் ஒப்பந்தப் பத்திரத்தின் உச்சியில் "முருகன் துணை"என்றுதான் எழுதியிருக்கிறீர்கள். (முருகன் அவர்கள் தமிழ்க் கடவுள் என்று கருதப்படுகிறவர் என்பது கவனிக்கத்தக்கது)**

நீங்கள் முதன் முதலாய் இயக்கித் தயாரித்த "நாடோடி மன்னனில்" தொடக்கப் பாடலாக "செந்தமிழே வணக்கம்" என்று தான் ஆரம்பித்தீர்கள். இப்படி.....இப்படியெல்லாம் அந்நியத்தோலை உரித்து உரித்துத் தமிழ்த் தோல் தரித்துக் கொண்டீர்கள்.
உங்களைப் பற்றி என் செவிகள் சேகரித்திருக்கும் செய்திகள் ருசியானவை.
ஒரு பாடகர் ஒரு மேடையில் உங்கள் பழைய பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார். இரண்டு மணி நேரம் கரைந்து போன நீங்கள் இப்போது என் கைவசத்தில் இருப்பது இது மட்டும் தான் என்று உங்கள் விலையுயர்ந்த கைக்கடிகாரத்தைக் கழற்றி அந்தப் பாடகருக்குப் பரிசளிக்கிறீர்கள் அது உங்கள் ஈகைக்குச் சாட்சி.
நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இறந்து போன உங்கள் இரண்டாவது மனைவியின் இல்லம் சென்றபோது படுக்கையறையின் கட்டிலைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதிருக்கிறீர்கள் அது உங்கள் ஈரத்திற்குச் சாட்சி.
தி.மு.க மாநாடுகளில் மாநாடு முடிந்ததும் பந்தலுக்கடியிலேயே படுத்துக்கிடக்கும் வெளியூர் மக்களுக்கு அவர்களே அறியாமல் அதிகாலைச் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் போவீர்களே ! அது உங்கள் மனிதாபிமானத்துக்குச் சாட்சி.
பொதுக் கூட்டங்கள் முடித்துவிட்டு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வைகை அணைக்கு வந்து பொன்னாங்கண்ணிக் கீரை இருந்தால் சாப்பிடுவேன் என்று நீங்கள் நிபந்தனை விதிக்க, ஆளுக்கொரு திசையில் அதிகாரிகள் பறக்க, பொன்னாங்கண்ணிக் கீரை தயாராகும் வரை சாப்பிடாமல் இருந்தீர்களாமே ! அது உங்கள் உறுதிக்குச் சாட்சி.




தொலைபேசி இணைப்பகத்திலிருந்த உங்கள் ரசிகர் ஒருவர் உங்கள் குரல் கேட்க ஆசைப்பட்டு இரவு பதினொரு மணிக்கு உங்கள் வீட்டுத் தொலைபேசி சுழற்றப்படுகிற சத்தம் கேட்டு ஆசையாய் எடுத்துக் கேட்க"டொக்"என்ற அந்தச் சின்ன சத்தத்திலேயே தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது என்பது உணர்ந்து கொண்டு "யாராயிருந்தாலும் தயவு செய்து போனை வையுங்கள்" என்று உடனே உத்தரவிட்டீர்களாமே ! அது உங்கள் கூர்மைக்குச் சாட்சி.

வெளிநாட்டில் கொடுத்த பணத்தை பி.சுசீலா தமிழ்நாட்டில் திருப்பித் தரவந்தபோது "ஏன் என்னுடைய உறவை முறித்துக் கொள்ளப் பார்கிறீர்களா"? என்று உரிமையோடு மறுத்து விட்டீர்களாமே. அது உங்கள் பெருந்தன்மைக்குச் சாட்சி.
நீங்கள் முதலமைச்சர். அப்போது தான் என் பெயரைத் தமிழ்நாடு மெல்ல மெல்ல எழுத்துக் கூட்டத் தொடங்கியிருக்கிறது.என் நண்பர் க.மூ. அரங்கனின் "வியர்வை முத்துக்கள்"என்ற கவிதை நூலைக் கலைஞர் வெளியிடுகிறார். நான் முதற்பிரதி பெற்றுக் கொள்கிறேன்.கலைஞரின் எழுத்துக்கள் என்னைக் கவிஞனாக்கின என்று அங்கே பேசுகிறேன். இது நடந்தது 18.5.1982 மாலை. 19.5.82 காலை ஐ.ஜி. அலுவலகம் தூள் பறக்கிறது.
"வைரமுத்து கலைஞரோடு ஏன் போனார்? எதற்குப் போனார்? எப்படிப் போனார்? என்று அவசர அவசரமாய் திராவகக் கேள்விகள் வீசித் திணற அடிக்கிறீர்கள். என்னைப் பற்றிய கோப்பு ஒன்று உங்கள் பார்வைக்கு வருகிறது. என் ஜாதகம் அறிகிறீர்கள்.
தேசிய விருது வாங்கிய பிறகு முதலமைச்சரான உங்களைச் சந்திக்காமல் கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெறுகிறேன். கவனிக்கிறீர்கள்.

இத்தனைக்குப் பிறகும் எனக்கு இரண்டு முறை விருது தருகிறீர்கள். உங்கள் பெருந்தன்மை கண்டு நெகிழ்ந்து போகிறேன். உங்கள் வெற்றியிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்வதற்கு ஒன்றே ஒன்று உண்டு அது தான்-
**நசிந்து போனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது.**

உங்கள் பாடல்களெல்லாம் தமிழ்நாட்டுக்கு நீங்கள் செய்த ரத்ததானம்.ஒரு பாடலின் பாடலாசிரியன் காணாமல் போவது பாடலுக்கு வெற்றி ஆகாது என்ற போதிலும், பாடலாசிரியன் முகம் கரைந்து போய் நீங்கள் மட்டுமே முகம் காட்டுவது உங்கள் பாடல்களில் மட்டும் தான்.
உங்களுக்காகப் படைக்கப்பட்ட பாடல்கள் என்னையும் படைத்திருக்கின்றன.
எனக்கு ஒரே ஓர் ஆசை மட்டும். ஆடிக்காற்றில் ஆடும் அகல் விளக்கின் சுடராய் ஆடிக் கொண்டேயிருக்கிறது.
நிகழ்விலிருக்கும் எல்லாக் கதாநாயகர்களும் என் பாடலை உச்சரித்திருக்கிறார்கள். உங்கள் உதடுகளைத் தவிர.
ஒரே ஒரு பாட்டு உங்களுக்கு நான் எழுத ஆசைப்பட்டேன். ஆனால்,என்னால் எழுத முடிந்தது உங்களுக்கான இரங்கல் பாட்டுதான்.

உங்களுக்கு என்னால் படைக்க முடிந்தவை - உங்கள் இறுதி ஊர்வலமான "காவியத் தலைவனுக்குக் கடைசி வரிகள்" தான்.
உங்கள் ராமாவரம் தோட்டத்திற்கு நான் முதன் முதலாய்ப் போனது உங்கள் அன்புத் துணைவியாருக்கு ஆறுதல் சொல்லத்தான். "உங்களைப் பற்றி முதன் முதலில் நான் பேசியது உங்கள் இரங்கல் கூட்டத்தில் தான். அன்று சொன்ன இறுதி வரியே இன்றும் என் இறுதி வரி

ஒரே ஒரு சந்திரன் தான்
ஒரே ஒரு சூரியன் தான்
ஒரே ஒரு எம்.ஜி.ஆர் தான்

நன்றி : வைரமுத்துவின் "இந்தக் குளத்தில் கல் எறிந்தவர்கள்" நூலிலிருந்து






# மாற்றங்கள் வெற்றிகளின் நுழைவுச் சீட்டுகள்!

சேவியர்



"விட்டு விடுதலையாகி ஒரு சிட்டுக் குருவியைப் போல" என்ற பாரதியார் பாடல் உங்களுக்குத் தெரிந்திருக்கும். சுதந்திரமாய்ப் பறக்கும் சிட்டுக் குருவி சிலிர்ப்பின் அடையாளம். எப்போதேனும் சிட்டுக் குருவியின் கூட்டைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா ? நேரம் கிடைக்கும் போது கவனித்துப் பாருங்கள். சிட்டுக்குருவிகளின் கூடுகள் எப்படி இருக்கின்றன ? கடந்த ஆண்டு எப்படி இருந்தன ? கடந்த நூற்றாண்டில் எப்படி இருந்தன ? வியப்பூட்டும் பதில் என்னவென்றால், நூற்றாண்டுகளாக இவற்றில் ஏதும் மாற்றம் இல்லை என்பதே!

விலங்குகள், பறவைகள் போன்றவையெல்லாம் வாழ்க்கை முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதில்லை. மனிதனுடைய வாழ்க்கையோ மாற்றங்களால் கட்டமைக்கப்பட்டது. அந்த மாற்றங்கள் தான் அவர்களுடைய வாழ்க்கையில் பல்வேறு வளர்ச்சிகளைக் கொண்டு வருகிறது.

சிலருக்கு மாற்றங்கள் எதுவும் பிடிப்பதில்லை. குறிப்பாக அலுவலக வேலை, பிஸினஸ் போன்றவற்றில் மாற்றம் என்றாலே காத தூரம் ஓடி விடுகிறார்கள். கிணற்றுத் தவளையைப் போல வட்டமடித்துக் கொண்டே இருப்பதில் தான் அவர்களுக்குத் திருப்தி அதிகம். அட்டவணையை மாற்றி எதுவும் செய்யமாட்டார்கள். வட்டத்துக்குள் ஓடிக் கொண்டிருக்கும் கடிகார முள்போல அவர்களுடைய வாழ்க்கை பேட்டரி தீரும் வரை ஓடி முடிகிறது.

ஒரு புதிய ரக செல்போனைப் பார்த்தவுடன் நமது செல்போனை மாற்றி விடலாமா எனத் தோன்றுகிறது. ஒரு எல்.இ.டி டிவியைப் பார்த்ததும் நமது சின்ன டிவியை மாற்றி விடலாமா என தோன்றுகிறது. புத்தம் புதிய விளம்பரம் ஒன்றைப் பார்த்தவுடன் மாற்றத்துக்காக மனம் தயாராகிவிடுகிறது. ஆனால் முக்கியமான வேலை சார்ந்த மாற்றங்கள் வரும்போது மட்டும் பயம் வந்து கூடாரமடிக்கிறது.






வெற்றியாளர்கள் மாற்றத்தைக் கண்டு பயந்து ஓடுவதில்லை. மாற்றம் என்பது மானிடத் தத்துவம் என புன்னகையுடன் எதிர்கொள்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சரியான மாற்றத்தை தேடிப் போய் அணைத்துக் கொள்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு உலகம் பொருளாதார வீழ்ச்சியில் வழுக்கியது. பலர் வேலையிழந்து, பணமிழந்து சிக்கலில் விழுந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்கு இடம் பெயர்ந்தார்கள். ஆனால் மாற்றங்களைக் கண்டு மிரண்டு போனவர்கள் பலர் தற்கொலை செய்து கொண்டு மடிந்தே போனார்கள்.

மாற்றம் நல்லது என்று பலரும் சொன்னாலும் மாற்றங்களை மக்கள் வெறுப்பதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு.

என்ன நடக்கப் போகிறதோ தெரியலையே ! எனும் பயம் முதலாவது. ஒரு வட்டத்துக்குள்ளேயே நீந்திக் கொண்டிருப்பவர்கள் சட்டென ஒரு மாற்றத்தைக் காணும் போது நிலை குலைந்து போகிறார்கள். தொட்டியில் நீந்திக் கொண்டிருக்கும் ஒரு மீனை பிடித்து தரையில் விட்டால் துடிப்பதைப் போல இவர்கள் துடித்து விடுகிறார்கள். உண்மையில் விடப்பட்டது தரையில் அல்ல, கடலில் எனும் வாழ்வின் உண்மையை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

என்னோட வேலை என்ன ஆகும்ன்னு தெரியலையே ? என்னோட எதிர்காலம் என்ன ஆகும்னு தெரியலையே, வாழ்க்கையை ஓட்ட என்ன செய்வேன்னு தெரியலையே என்றெல்லாம் மாற்றம் குறித்த திகில் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறது.

இரண்டாவது பயம் கட்டுப்பாடு சேர்ந்தது. நம்ம கையில கண்ட்ரோல் எதுவும் இல்லையே எனும் பயம் அது !. நடக்கும் மாற்றங்களெல்லாம் வேறு ஏதோ ஒரு நபருடைய கட்டுப்பாட்டில் இருப்பது போல ஒரு எண்ணம் இவர்களுடைய மனதில் ஓடிக் கொண்டே இருக்கும். நமது வாழ்வின் கடிவாளம் நம்மிடம் இல்லையேல் இதில் எப்படி வெற்றி பெறுவது எனும் பயம் அவர்களுக்கு மாற்றத்தைக் கண்டு விலகி ஓடும் மனநிலையைத் தந்துவிடும்.

மூன்றாவது பயம் தோல்வி சார்ந்தது. சூழல் மாறிவிட்டால் வெற்றி பெற முடியுமா எனும் குழப்பம். புதிய இடம் எப்படி இருக்குமோ ? புதிய தலைமை எப்படி இருக்குமோ ? தரப்பட்டிருக்கும் புதிய வேலையில் திறமையாய் செயல்பட முடியுமா ? ஒருவேளை வெற்றி பெறாவிடில் வேலை நிலைக்குமா ? இப்போது இருக்கின்ற நல்ல பெயர் தொடருமா என சங்கிலித் தொடர் போலத் தொடரும் பயங்கள் இதில் அடக்கம்.

நான்காவது பயம் சோம்பேறிகளின் பயம். இந்த வேலையை நாலுவருஷமாவோ, நாப்பது வருஷமாவோ பண்றேன். இதோட எல்லா நுணுக்கங்களும் எனக்குத் தெரியும். கண்ணை மூடிட்டு கூட இந்த வேலையைச் செய்ய முடியும். இனிமே புதிய வேலையைச் செய்தா எப்படி ? இப்போ இருக்கிற இந்த ரிலாக்ஸான சூழல் நிலைக்குமா ? எனும் பயம் அது. ரொம்பவே சொகுசான வேலை சுழற்சியிலிருந்து வெளிவர பயப்படும் மனநிலை இது.

## மாற்றங்களை வெறுப்பவன் அழுகத் துவங்குகிறான்

"மாற்றங்களை வெறுப்பவன் அழுகத் துவங்குகிறான், மாற்றங்களை ஏற்காதவர்கள் கல்லறை மனிதர்கள் மட்டுமே" என்கிறார் இங்கிலாந்தின் ஹேரால்ட் வில்சன்.

ஒருவர் பால் ஆலன் என்பவருடன் சேர்ந்து டிரா.ஃப்-ஓ-டேட்டா எனும் சின்ன நிறுவனத்தை ஆரம்பித்தார். டிராபிக் சிக்னல் தகவல்களிலிருந்து தகவல்களைப் பெற்று அவற்றைப் பயனுள்ள அறிக்கைகளாக மாற்றுவது தான் அவர்களுடைய திட்டம். ஓரளவு நிறுவனம் வெற்றிகரமாய் இயங்கிக் கொண்டிருந்தபோது அவர் அதை உதறிவிட்டு மாற்றத்தை நாடினார். அந்த மாற்றம் அவருக்கு உலகப் புகழைக் கொண்டு வந்து சேர்த்தது. அவர் தான் மைக்ரோசா.ஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் !



ஸ்ரீ மகா காளி ஜோதிட நிலையம்

Sri Maha Kali Jothida Nilayam

யேர்மனி வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி



Astro Palmist
Pandit Thulasidasan

அகில உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
பண்டிற் துளசிதாஸ் அவர்களின் வருகை

ஆன்மீக அன்பர்களின் வாழ்வு மேலும் வளம் பெறவும், திருமணங்கள், காதல்விவகாரங்கள்,வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும் மற்றும் குடும்ப முரன்பாடுகளை நீக்கியும்.குழந்தைச் செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு கேது நிவர்த்திப் பரிகாரங்கள் வழங்கியும் நோய் நொடிகள் கடன் தொல்லைகள் மற்றும் பணம் பொருள் வீடு வாசல் பெற்று பயன்பெற உங்களிடம் யாதகக்குறிப்பு இல்லாவிடினும் கணித்து பலன் சொல்லப்படும். இல்லையேல் கைரேகைமூலம் பலன் சொல்லப்படும்..





Heiderstr.86. 45476 Mülheim
(Bushaltestelle:Steinmetzstr)

காலை 9.00 மணியில் இருந்து
இரவு 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:
0152 181 33 859






நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாற்றங்கள் நம்மைச் சந்தித்துக் கொண்டே தான் இருக்கும். மாற்றங்களை எந்த அளவுக்கு எதிர்க்கிறோமோ, அந்த அளவுக்கு மாற்றங்களுக்குள் இணைய கஷ்டப்பட வேண்டியிருக்கும். திசை மாறித் திசை மாறி ஓடும் நதியின் ஓட்டத்துக்கு ஏற்ப நீந்துவதே எளிதானது. எதிரேறுதல் கடினமானது. எனவே மாற்றங்களை மனதளவில் ஏற்றுக் கொள்வதே, மாற்றங்களைப் பழகிக் கொள்வதன் முதல் படியாகும்.

ஒரே பள்ளிக்கூடத்தில் பல ஆண்டுகள் பணியாற்றி பணிமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் மன உளைச்சல் கடுமையானது. அவர்கள் பழகிய சூழலை விட்டு வெளியேறுவதை சுமையாகக் கருதுகிறார்கள். புதிய நபர்களைப் பரிச்சயப்படுதல், புதிய சூழலில் நடைபோடுதல், புதியவற்றைச் செய்தல் என பல்வேறு நல்ல அம்சங்கள் அதில் உள்ளன. இரண்டு மணிநேர திரைப்படத்துக்கே பல மாற்றங்கள், இனிய ஆச்சரியங்களெல்லாம் எதிர்பார்க்கும் நம்மில் பலரும் வாழ்க்கையில் அத்தகைய ஆச்சரியங்களைச் சந்திக்கப் பயப்படுவது வியப்பளிக்கிறது.

கோயில் திருவிழாக்களில் விற்கும் கலைடாஸ்கோப் பார்த்திருப்பீர்கள். ஒரு முனையைக் கண்ணில் வைத்து சுழற்றிச் சுழற்றிப் பார்க்கும் போது பிரம்மாண்டமான காட்சிகள் விரிவடைந்து நம்மை வியப்பூட்டும். அப்படிக் காட்டுபவை ஒரு சில வண்ணத் துண்டுகள் தான். மாற்றமும் அத்தகையதே. ஒரு சின்ன மாற்றம் கூட நம்முடைய பார்வையில் மிகப்பெரிய விஸ்வரூப வேறுபாடைக் காட்டக் கூடும். எனவே மாற்றங்களைக் குறித்து மலையளவு கற்பனைகள் வளர்க்காமல், அதன் இயல்பிலேயே அணுகுவதே சிறந்தது.

“காலங்களைத் தாண்டி வாழ்பவை மிகவும் வலுவான பிராணிகளோ, மிகவும் அறிவார்ந்த பிராணிகளோ அல்ல. மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் பிராணிகளே தலைமுறை தாண்டியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன” என்கிறார் டார்வின் ! மாற்றங்களை ஏற்றுக் கொள்வதன் தேவையை தனது பாணியில் சொல்கிறது டார்வினின் தத்துவம். குரங்கிலிருந்து வந்தவன் மனிதன் எனும் அவருடைய கோட்பாடு கூட மாற்றத்தின் மீதான கட்டமைப்பு தானே !

முன்னேற்றத்துக்கான மாற்றங்களை விரும்பும் மனம் பாசிடிவ் மனநிலையிலிருந்தே புறப்படுகிறது. நான் இந்த மாற்றத்துக்காகப் பயப்படுகிறேனா ? பயப்படுகிறேன் எனில் ஏன் பயப்படுகிறேன் ? இந்தப் பயம் நியாயமானது தானா எனும் சில கேள்விகளை நமக்கு நாமே கேட்பதே நமக்கு மிகப்பெரிய உத்வேகத்தை அள்ளித் தரும். எத்தனை முறை மாற்றத்தைக் குறித்து நேர்மறையாய் சிந்தித்திருக்கிறோம், எத்தனை முறை எதிர் மறையாய் சிந்தித்திருக்கிறோம் என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். நீங்கள் வெற்றியாளரா, இல்லையா என்பது புரியவரும்.

அமெரிக்காவிலுள்ள மேசிஸ் எனும் மிகப்பெரிய விற்பனை நிலையம் இன்று சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய்கள் லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த நிறுவனத்தை ஆரம்பித்த ரௌலண்ட் ஹஸி மேசி என்பவர் இந்தக் கடையை ஆரம்பிக்கும் முன் நான்கு கடைகள் ஆரம்பித்தார். ஒவ்வொன்றாக நான்குமே தோல்வியடைந்தன. ஒவ்வோர் தோல்வியிலும் மாற்றத்தைக் கற்றுக் கொண்டார். அதை விரும்பி ஏற்றுக் கொண்டு அடுத்த நிலைக்குத் தாவினார். கடைசியில் மேசிஸ் அவருக்கு வெற்றி தந்தது. இன்று 800 க்கும் மேற்பட்ட கடைகள் அமெரிக்காவில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## துணிச்சலுக்கும் முட்டாள் தனத்தும் வேறுபாடு உண்டு!

துணிச்சலுக்கும் முட்டாள் தனத்தும் வேறுபாடு உண்டு. விமானத்திலிருந்து பாராசூட்டுடன் குதிப்பதற்கும், எதையும் யோசிக்காமல் குதிப்பதற்குமான வித்தியாசமாய் இதைச் சொல்லலாம். எனவே மாற்றத்தை நோக்கி இடம் பெயரும் முன் அது குறித்த புரிதலும், அறிதலும் இருக்க வேண்டியது அவசியம். அதன் பின் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முதல் சுவடை வைக்கும்போதே இதன் முழு பொறுப்பும் என்னுடையது என்பதை மனதில் எழுதுங்கள். அது மாற்றத்தை வெற்றிகரமாக மாற்றும் உத்வேகத்தை உங்களுக்குத் தரும்.

மாற்றங்களை எதிர்கொள்வோம்!
வாழ்வினிலே இனி வெல்வோம்













புதிய முகவரியில் ஆரம்பம் 02-01-2017
AKR Visualizers
Photography and Cinemotography
உங்களது இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் மற்றும் ஏனைய விழாக்களையும் உங்களது வியாபாரத்தினை விருத்தி செய்து கொள்ளும் வகையலும் எமது சேவை...!
Photography & Cinematography
(Wedding, Birthday Parties, Saree Ceremony, Communion, Couple Shoots & Etc. )
Instant Photograph
Graphic Designs & Printing Services
(Flayers, Business Cards, Logo, Banners, Roller Banners, Menu Cards & Etc.)
Digital Printings
Web Designs
Video Editings
Photo Album Printings & Etc.
Large Print
WE PRINT YOUR IDEA
0049 231 2886 9336
0049 162 803 1647
0049 176 4154 7007
Rheinische Str. 56 | 44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
AKR Visualizers நிறுவனத்தின் 02.01.2017 திறப்புவிழாவை முன்னிட்ட சிறப்புச் சலுகை
வெற்றிமணி
பத்திரிகை வாசகர்கள் முதல் 20 பேருக்கு 100€ பெறுமதிக்கு கொள்வனவு செய்வதற்கான பற்றுச்சீட்டு
E.S.T
TKS BEST FOODS
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
1. தங்களது விழாவுக்கோ அல்லது நிறுவன விளம்பரப்படுத்துவதற்கான முன்பதிவினை எம்மிடம் குறைந்தது 25% பணம் செலுத்தி உறுதி செய்திருத்தல் வேண்டும். (குறைந்தது 1500€க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்)
2. இச்சலுகை 31.03.2017 வரை மட்டுமே செல்லுபடியாகும்.



# நின்னைச் சரணடைந்தேன் 9

கலாசூரி திவ்யா சுஜேன்

பயனற்ற கவியைப் பாடியறியாதவர் பாரதி! பண்டைப் பாவலர் பலர்க்கும் இளையாதவர்! இக்காலத்திலும் இணையற்றவர்! முக்காலத்து கண்ணாடி கவிஞனான இவர் முத்தமிழ் தேன் தந்தவர்! இயற்றமிழுக்குள் இசையையும், நாட்டியத்தையும் பதுக்கி வைத்துச் செதுக்கிய சிற்பி! பண்ணேறி விண்ணுயரும் பாவமுடை பாக்கள் புனைந்தர். கவலை மறந்து களித்திருக்க கவி மருந்து தந்த கலைமகள் அருளிய கவிவாணன்.
அவர் கோர்த்த நெஞ்சள்ளும் சொற்கள் கவி வரைந்தனவா் இல்லை கவி வரையும் எண்ணம் கருமுகிலாய் படரும் பொழுதே கலைச் சொற்கள் மழையாகி தாமாய் கட்டவிழ்த்து அவரை நனைத்துச் சென்று இன்றும் எம்மீது ஈரம் குறையாது தண்ணென்று புதுசுகம் தருகின்றனவா?
மொழி மோகக்காரன்! இவன் தமிழ் திறம் இறவாது நின்று மொய்க்கமு் வண்டினம் பருகும் கடிமலர் மேதன்சுவை தருவது "தீஞ்சொற் கவிதையஞ் சோலை தனில்" என இயற்சுவையை இயற்கையின்பத்தோடு இணைத்த அருங்கவிஞன் தமிழ் மொழி பற்றிய உச்சத்தை மிக எளிதாய் விளக்குகிறார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

பாமரராய் விலங்குளாய்" உலகனைத்தும்
இகழ்ச்சி சொல்லப் பான்மை கெட்டு
நாமும் தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்!

இனிமை மட்டுமா? தேன் போன்ற நாவூறும் சுவை. இன்பம் நம் செவிகளில் தமிழின் ஓசை வந்து பாயும் தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, அதன் ஓசைக்கே மொழி நயத்திற்கே இன்பமுண்டு அதனை உலகமெல்லாம் பரப்பிடும் வழி வகைகள் செய்ய வேண்டும் என்று பாரதி விண்பத்து தூண்டி சென்ற தத்துவத்தை நினைத்தாலே அடடா! இந்த ஒரு ஆயுள் போதுமா? ஏனத் தோன்றும் அச் செயற்பாட்டினுள் எம்மை புகுத்திக் கொண்டால் தீய எண்ணங்களுக்கும், பாதாக மிச்சமிருக்காது. ஆக, பாரதி விட்டுச் சென்ற ஒவ்வொரு விண்ணப்பங்களும் அச் செயலையும் தாண்டி உயர் மானிடராய் எம்மையும் வழிவகுக்க வல்லன. பாரதி தந்த தமிழை உலகெலாம் பரவிட வழி செய்தாலே போதும் தமிழ் தளைத்தோங்கி தேன் சொட்டும் எந்த நாட்டில் எம் மொழியில் ஈடுபட்டிருந்தாலும் தமிழன் எனும் நாமத்தோடு பிறந்து விட்டால் குழந்தைப் பருவம் முதல் பாரதி தமிழையும் ஊட்டி வளர்த்திடல் உத்தமம்.
தமிழராய் பிறந்தும் தமிழ் மொழி சுவையை பேசாதோர் ஊமையராய், தமிழ் மொழி இசையை கேளாதோர் செவிடர்களாய்? தமிழ் மொழித் திறத்தை படித்து மகிழாதோர் குருடர்களாய் கருதுகிறார். அவர்களுக்கெல்லாம் நல்ல மருத்துவமாய் ஒரே ஒரு தீர்வு கூறுகிறார். நலம் பெற வேண்டும் எனில், தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! பாரதிப் புதையலைத் தேடித் தேடித் தெளியவே தேவை ஆயுள் நீளம் எனலிருக்க கம்பனை, வள்ளுவனை, இளங்கோவை வெறும் புகழ்ச்சியல்ல என மெச்சிப் போற்றி எதனையெல்லாம் நாம் படித்து பயன்பெறலாம் என பாரதியே வழியும் காட்டுகிறான்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற்கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்.

கனவு மெய்ப்பட வேண்டும் காரியத்தில் உறுதி வேண்டும் என்பதில் உண்மை விளக்கம் சொன்னவர் வெறுமனே கருத்தைக் கூறாது செயல்படுத்தும் வழிகளையும் சொல்கிறார். நம் தெருவெல்லாம் நம்மொழி தெறித்தால் போதாது. உலகெலாம் தமிழ் முழங்க என்ன மார்க்கம் உண்டு எனக் கூறுகிறார். அதற்கு இரண்டு வழி ஒன்று பிறநாட்டு நல்ல அறிஞர்கள் நூல்களை நம் தமிழ் மொழியிற் மொழியாக்கம் செய்ய வேண்டும். அதனால் நம் மக்கள் அறிவு உலகத் தரத்திற்கு உயர்வதோடு தமிழ் மொழியும் உலக மேடையில் உலாவரும். இரண்டாவது எற்றைக்கும் நிலைத்து நிற்கும் வண்ணம் தேர்ந்த நன் நூல்களை தமிழ் மொழியில் எழுத வேண்டும் என்று கூறுகிறார். நம்மை நாமே மெச்சிக் கொண்டிருந்து பயனில்லை. நம் மொழியை அயல் நாட்டவரும் வணங்கும் வகை செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்று பரந்த நோக்கில் நல்லெண்ணம் விதைத்தவர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்தரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்ற வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."

மேற்கூறப்பட்ட அத்தனைக்கும் மகுடம் தரிப்பதாய் மேலும் கூறுகிறார்...
கேவலமாய் கலைக்கு விலைபேசும் ஞானக்குருடனுக்கு சங்கீத வித்வான் குழந்தையாகப் பிறப்பானோ? "சங்கத் தமிழ் ஏட்டை காத்தாடியாக்கி இங்கிதம் காணும் மக்களுக்கு மக்களாய் புதுக்கவிப் பண்டிதன் பிறப்பானோ? இவைக்கும் விடை கூற பாரதி முயற்சிக்கிறார்.


"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போற் கலைப் பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழி பெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்"

மனித வர்க்கத்திற்கு உயர்வு கலையும், கவிதையும் இவை மேலும் மேலும் வெள்ளம் போல் பெருகி நிறைந்து வழியுமானால், அஞ்ஞானம் எனும் பள்ளத்தில் விழுந்து அறிவுக் குருடராய் கிடக்கும் உபயோகமற்றோரெல்லாம் விவேகம் எனும் வழி பெற்று மேன்நிலை பதவியைக் கொபள்வார்கள். இவ்வாறு கலையையும், கவிதையையும் வளர்த்தெடுப்பதற்கு முதலில் உள்ளத்தில் உண்மை வேண்டும். சத்தியஜோதி இருப்பின் பேச்சினிலும் அறிவுச்சுடர் உண்டாகும். இங்ஙனம் ஓர் தயார் நிலை அடைந்தபின் தெளிவான அமுது போன்ற நற் தமிழின் சுவையைக் கண்டறியும் உள்ளமும் உணர்வும் பெறுவர். அச்சுவையைக் கண்டறிந்தோர் இப்பூமியிலேயே தேவர்களின் உன்னத நிலைச் சிறப்பினை அனுபவிப்பார்கள் என்று மகுடம் சூடும் முத்துதமிழ் சொல் ஆரம் சூட்டுகிறார்.
மழை வீசிச் செல்லும் தென்றல் சுகத்தை எத்தனை தடவை உணர முயன்றாலும் முற்றாய் அனுபவிக்க இயலாது தொலைவது போல் கவிக்கிறுக்கன் பாரதியின் தெவிட்டாத திருக்கவியைத் தொட்டணைக்கும் போதெல்லாம் தொலைந்துருகினாலும், இன்னும் மிச்சம் இருப்பதாலேயே என்றென்றும் தோன்றும் உடலம் தரை தொட உள்ளம் வான் தொட்ட ஜீவக்கவிஞனின் திருத்தாள் பற்றிச் சரணடைவதிலும் பிறிதோர் பெருமையுண்டோ?


S.J. ASIAN - AFRO STORE







உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப்
பயனடையுங்கள்.

Mannheim
S1 – 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

Ludwigshafen
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de



Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்
40க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான Tamil Super hit திரைப்படங்கள்
INCLUDED
EROS NOW
6000க்கும் அதிகமான Hindi &Tamil திரைப்படங்கள்
விசேட சலுகை ஒருவருட இணைப்புச் சந்தா
LYCATV SET TOP BOX உடன்
£/€ 79 மட்டுமே
SUBSCRIBE NOW!
GERMANY 069 1200 7102
UNITED KINGDOM 0207 132 2727
www.lycatv.tv

# கண்ணன் என் காதலன்





குரு அரவிந்தன்

அவனுடைய பெயர் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவனை முதல் முதலாகப் பார்த்தபோது அவன் மீது எனக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது என்னவோ உண்மை தான்.

காரணம் அவனிடம் ஏதோ ஒருவித கவர்ச்சி இருந்தை மனசு ஏற்றுக் கொண்டதாலோ என்னவோ அவனை இன்னும் ஒரு தடவையாவது பார்க்க வேண்டும் என்பது போலக் கண்கள் அடிக்கடி அவனைத் தேடியது. ஆனால் அந்த இனிய சுகத்தை நீடிக்க விடாமல் நான் கண்ட காட்சி என் மனதை நோகவைத்தது. அச்சம்பவத்தால் எவ்வளவு தூரத்திற்கு அவனிடம் கவர்ச்சி ஏற்பட்டதோ அதே போல அவனிடம் எனக்கு எரிச்சலும் ஏற்பட்டது. அவனைச் சுற்றி என்னுடைய வயதை ஒத்த இரண்டு மூன்று பதுமவயதுப் பெண்கள் கதைச்சுச் சிரித்து அவனைச் சீண்டிக் கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நினைத்தேன். ராதையர் கொஞ்சும் ரமணனாக இருப்பானோ என்று நினைக்கத் தோன்றியது. ஆனாலும் புதியவளான நான் எப்படி அவனோடு பழகும் அவர்கள் மீது பழியைப் போடலாம் என்று எனக்குள் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

எனது சினேகிதியின் நடன அரங்கேற்றத்திற்குச் சென்ற போதுதான் அங்கே அவனைப் பார்த்தேன். இளம் பெண்களுடன் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தவன் திடீரென மேடையில் தோன்றினான். அரும்பு மீசைகூட முளைக்காத சிரித்த முகம், பட்டு வேட்டி அணிந்து தங்க நிறத்தில் குர்த்தா அணிந்திருந்தான். கலைஞர்களின் அறிமுகத்தின் போது அவனது பெயர் 'கனன்' என்று சொல்லி சிறந்த வேணுகான இளம் கலைஞன் என்று அறிமுகம் செய்தனர். அவனும் சபையோர்க்கு ஒரு கும்பிடு போட்டு ஏனைய கலைஞர்களுடன் மேடையில் அமர்ந்தான். மேடையில் வண்ணவிளக்கு வெளிச்சம் சுற்றி வந்த போது நீலநிறம் அவன் மீது பட்டுத் தெறித்த போது கோபியர் கொஞ்சும் கண்ணன் போலவே காட்சி தந்தான். அவனுக்கு எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று ஆவலோடு காத்திருந்தேன். அவன் புல்லாங்குழலில் பாடலை இசைத்த போது நான் என்னை மறந்து கண்களை மூடி அந்த இசைக்குள் மூழ்கிப் போனேன். ஆனாலும் அவனிடம் இனம் தெரியாத பொறாமை கலந்த ஒருவித வெறுப்பு எனக்குள் ஓடிக்கொண்டே இருந்தது. காரணமே இல்லாமல் ஒருவனைப் பிடிக்கவில்லை என்றால் அதற்கு என்ன காரணமாக இருக்கும்?

அரங்கேற்றம் முடிந்ததும் எல்லா சினேகிதிகளும் அரங்கத்தின் பின் பகுதியில் ஒன்று கூடினோம். அப்பொழுதுதான் 'மீட் மை பிரேண்ட் கனன்' என்று அவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள் விதுரா. ஹாய் என்று பதிலுக்குச் சொல்லிக் கையை நீட்டினேன், அவன் கும்பிட்டான். நாகரிகம் தெரியாத அகங்காரம் பிடித்தவனாக இருப்பான் போலும்! ஆனாலும் நான் சமாளித்துக் கொண்டு சினேகிதிகளுடன் கதையைத் தொடர்ந்தேன். அவனை உதாசீனப்படுத்த நினைத்தாலும் என் கண்கள் என்னை அறியாமலே அவனைச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தன.

இரவு தூக்கத்திற்குச் செல்லும் போது அவனது நினைவு மீண்டும் வந்தது. யார் இவன், கனன் என்ற பெயர் எப்படி வந்தது. கனன் என்ற பெயர் எங்களில் யாருக்கும் இல்லையே, வடநாட்டைச் சேர்ந்தவனாக இருப்பானோ?

எண்ணி யெண்ணிப் பார்த்தேன் - அவன்தான் யாரெனச் சிந்தை செய்தேன்
இனம் விளங்க வில்லை - எவனோ என்னகந் தொட்டு விட்டான்.
வினவக் கண்விழித்தேன் - சகியே! மேனி மறைந்து விட்டான்
மனதில் மட்டிலுமே - புதிதோர் மகிழ்ச்சி கண்டதடீ..!

தூக்கத்திலும் அவன் வந்தான். அந்தச் சிரிப்பு என்னை மயக்கி விட்டிருந்தது. என் தன்மான உணர்வு அவனைப் பற்றிச் சினேகிதிகளிடம் விசாரிப்பதைக் கட்டுப் படுத்தி வைத்திருந்தது. 'ஓய்வு மொழிதலுமில்லாமல் - அவன் உறவை நினைத்திருக்கும் உள்ளம்' என்று பாரதியார் பாடியதுபோல, அவனை என் உள்ளம் விரும்பத் தொடங்கியிருப்பதை நான் உணர்ந்தேன். இளைஞர்கள் யாரைப் பார்த்தாலும் அவனே எங்கும் வியாபித்திருக்கிறான் என்பது போல உணர்ந்தேன். எங்கேயாவது அரங்கேற்றத்திற்கு அவன் புல்லாங்குழல் வாசிக்க வருவானா என்று காத்திருந்து நானும் அங்கெல்லாம் போகத் தொடங்கினேன். அன்று நான் மினுங்கல்கள் பதித்த கருநீலச் சேலை ஒன்றை அணிந்து அரங்கேற்றத்திற்குச் சென்றிருந்தேன்.

'ஏஞ்சல் மாதிரி இருக்கிறாயடி மீரா' என்று என் சினேகிதி விதுரா என்னைப் புகழ்ந்த போது அவனும் அருகேதான் நின்றான். ஆனாலும் நான் அவனைக் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவேயில்லை. அரங்கேற்றம் காணும் பெண் ஆடைமாற்றச் செல்லும் போது கிடைக்கும் நேரத்தில் இசைக் கலைஞர்கள் தங்கள் திறமையைக் காட்டுவதுண்டு. அன்றும் அப்படி ஒரு இடைவேளையின் போது அவன் வேணுகானமிசைத்தான்.

பட்டுக் கருநீலப் - புடவை பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில் - தெரியும் நட்சத் திரங்க ளடீ!
சோலை மல ரொளியோ - உனது சுந்தரப் புன்னகை தான்
நீலக் கடலலையே - உனது நெஞ்சி லலைக ளடீ..!

செஞ்சுருட்டி ஏகதாளத்தில் சிருங்கார ரசத்தோடு அந்தப் பாடல் அருமையாக இசைக்கப்பட்ட போது சபையோர் கரவொலி எழுப்பினர். ஒருவேளை எனது கருநீலப் புடவையைப் பார்த்து விட்டுத்தான் அந்தப் பாடலை இசைத்தானோ என்று நினைத்தேன். இனியும் பொறுக்க முடியாது என்பதால் வெட்கத்தைவிட்டு விதுராவிடமே அவனைப் பற்றி விசாரித்தேன். அவனுடைய உண்மையான பெயர் கண்ணன் என்றும் ஆங்கிலத்தில் வாசிக்கும்போது நண்பர்கள் கனன் என்று சொன்னதால் அந்தப் பெயரே நண்பர்களிடம் நிலைத்து விட்டதாகச் சொன்னாள். எனது அரங்கேற்றத்திற்கும் இவனையே அழைக்க வேண்டும் என்று அப்போதே நிச்சயப் படுத்திக் கொண்டேன்.

கண்ணனைச் சந்திக்கலாம் என்ற எண்ணத்தோடு அரங்கத்தின் பின் பக்கம் சென்றேன். அங்கே கண்ணன் தனிமையில் நின்றான். என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் பரவாயில்லைக் கேட்டுவிட வேண்டும் என நினைத்தேன். வெட்கத்தோடு தலை குனிந்தபடி அருகே சென்றேன்.

மூத்தவர் சம்மதியில் - வதுவை முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப் பேனோ டீ? - இதுபார், கன்னத்து முத்த மொன்று!


நான் ஒரு கணம் உறைந்து போனேன். எதிர்பார்காத நேரத்தில் அருகே கேட்ட 'இச்' என்ற அந்தச் சத்தத்தால் வெட்கப்பட்டுக் கன்னத்தைப் பொத்திக் கொண்டு சட்டென்று கண்விழித்துப் பார்த்தேன்.

என்னையே ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டு படுக்கைக்கு அருகே தங்கை நின்று கொண்டிருந்தாள். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு,
'என்னடி?' என்றேன்.
'கனாக்கண்டியா அக்கா?' என்றாள்.
'ஆமாம், சுவீட்றீம், நீதான் அதைக் கலைசச்சிட்டியே' என்றேன்.
'தெரியுது, அதுதான் தூக்கத்திலே சிரிச்சியா?' என்று சொல்லிக் கொண்டே வெளியேறினாள் தங்கை.
இப்பதான் நவீன தொழில் நுட்பவசதிகள் காதலுக்குத் தீனிபோட இருக்கிறதே, செல்போனை எடுத்து அரங்கேற்றத்தில் எடுத்த அவனது படத்தைக் குளோசப்பில் கொண்டு வந்தேன். என்னைக் கொல்லாமல் கொல்லும் அந்தப் பார்வை.. கண்ணா தூக்கத்தில் நீ மட்டும்தான் முத்தம் கொடுப்பியா? ம்..ம்..
காத்திருப் பேனோ.. டா? - இதுபார்,
கன்னத்து முத்த மொன்று!


இச்சென்று செல்போன் திரையில் அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்தேன்.



# வல்லவன் வாழ்வான்







வல்லவன் வாழ்வான் எம்ஜிஆர் என்ற ஒரு நடிகனுக்கு எப்படி இப்படியான ஒரு சிறப்பு வந்தது? நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாக இருக்கிறது. இவர் சென்ற அந்த உச்சத்துக்கு இனி எந்த ஒரு நடிகனும் சென்று தொட்டு வர வாய்ப்பே இல்லை என்றளவுக்கு இவரது சாதனை உயரமானது. ஒரு நூற்றாண்டு கடந்தும் இன்னும் பலரது நினைவுகளில் இவரது பெயர் ஆழப் பதிந்து இருக்கிறது.

## ஆழ்வாப்பிள்ளை

சற்றே அசந்தால் கூட கீழே தள்ளிவிடும் கட்டுக்கடங்காத இரட்டைக் குதிரைகள்தான் சினிமாவும் அரசியலும். ஒரே நேரத்தில் இவ்விரண்டையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு சாகசப் பயணம் செய்து வெற்றிக் கொடி நாட்டியவர் இவர் ஒருவராகத்தான் இருக்கும். அதனால்தான் சினிமாவில் புரட்சி நடிகராகவும் அரசியலில் புரட்சி தலைவராகவும் இவர் விழிக்கப்பட்டார் போலும்.
என்டிஆர் கூட எம்ஜிஆரின் அரசியல் வெற்றியைப் பார்த்த பிறகே துணிவு கொண்டு அரசியலில் குதித்தார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

சினிமாவில் ஒரு நிலையான இடத்தைப் பிடிப்பதற்கு கடுமையாகப் போராட வேண்டும். பிறகு பிடித்த இடத்தை தக்க வைக்க இன்னும் அதிதீவிரமாகப் போராட வேண்டும். இதுதான் சினிமா உலக விதி. இந்த இரண்டு விடயத்திலும் எம்ஜிஆரின் போராட்டம் ஒன்றும் சாதாரணமானது கிடையாது.

மலையாளி என்பதால் இவரால் ”ப” உச்சரிக்க முடியவில்லை, முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டத் தெரியவில்லை, மொத்ததில் எம்ஜிஆருக்கு நடிக்கவே தெரியவில்லை என்று இவரது முதல் படத்திலேயே பேச்சுக்கள் எழ ஆரம்பித்தன. அத்தனை அவமானங்களுக்கு மத்தியிலும் நடித்த போதும் அந்தப் படம் பாதியிலேயே நின்று போய்விடுகிறது. மீண்டும் ஐந்துக்கும் பத்துக்கும் என்று சிறு சிறு வேடங்களில் இவரது முப்பது வயது மட்டும் காலங்கள் ஓடுகிறது. முப்பதாவது வயதில் மீண்டும் நாயகன் பாத்திரம் இவரைத் தேடி வருகிறது. ஆனால் நாயகியை விட குறைந்த சம்பளம். ஆனாலும் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

எடுத்த உடனேயே திரையுலகில் சாகச நாயகனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள இவருக்கு நிறையவே சிக்கல்கள் இருந்ததன. ஏற் கெனவே திரையுலகில் நடிகர் ரஞ்சன் ஒரு சாகச நாயகனாக நிலை பெற்றிருந்தார். ஆடல், பாடல், அதிரடிச் சண்டைகள் என றஞ்சன் திரையில் அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்த பொழுது றஞ்சனைவிட தன்னை உயர்வாகக் காட்ட இவரது அடுத்த போராட்டம் ஆரம்பமானது.

றஞ்சன் இந்தித் திரையுலகை நோக்கித் தன் பார்வையை சற்றுத் திருப்பிய பொழுது கிடைத்த அந்தச் சின்ன இடைவெளியில் தமிழ் திரையில் தன்னை சாகச நாயகனாக எம்ஜிஆர் நிலைநிறுத்திக் கொண்டார்.
எம்ஜிஆரின் இடத்தை அசைத்துப் பார்க்க திரையுலகில் நுளைந்தவர்தான் சி.எல்.ஆனந்தன். விஜயபுரி வீரன் படத்தில் சி.எல்.ஆனந்தனின் வாள் வீச்சும், ”ரோஜா மலரே ராஜகுமாரி” என்று இளவரசி சச்சு மீது காதல் கொள்ளும் பாணியும் எம்ஜிஆரின் வயிற்றில் நிச்சயமாகப் புளியைக் கரைத்து ஊற்றி இருக்கும்.

இத்துடன் சாண்டோ சின்னப்பாதேவருடனான எம்ஜிஆருக்கு ஏற்பட்ட முரண்பாடும் எம்ஜிஆருக்கு அடுத்த தலைவலியைத் தந்திருக்கும். சாண்டோ சின்னப்பாதேவருக்கும் எம்ஜிஆருக்குமான தகராறு தாய்க்குப்பின் தாரம் படத்திற்குப் பின்னால் ஆரம்பமாயிற்று. அதன் பின்னர் சின்னப்பா தேவர் எம்ஜிஆரை கைவிட்டு விட்டு றஞ்சன், உதயகுமார், ஜெமினி கணேசன், சி.எல். ஆனந்தன் போன்றோரை வைத்து திரைப்படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார். இதே நேரத்தில் எம்ஜிஆரின் போதாத காலம் நாடகத்தில் நடிக்கும் பொழுது ஒரு சண்டைக் காட்சியில் பயில்வானை தலைக்கு மேலே தூக்கும் பொழுது கால் முறிந்து ஒரு வருடம் படுக்கையில் இருக்க வேண்டியதாயிற்று.
எஸ்.ஏ.அசோகனை கதாநாயகனாக வைத்து சான்டோ சின்னப்பாதேவர் ஒரு படம் உருவாக்கிக் கொண்டிருந்தார். இன்னொரு அதிரடி கதாநாயகனை சமாளிக்கும் திறன் அப்பொழுது எம்ஜிஆரிடம் குறைந்து போயிருக்க வேண்டும். முதற்கட்டமாக சாண்டோ சின்னப்பாதேவரைச் சந்தித்து அவருடன் சமரசம் செய்து கொண்டார். எம்ஜிஆரின் பேரில் கொண்ட அபிமானமும், தாய்க்கும் பின் தாரம் படத்தின் வெற்றியும் சாண்டோ சின்னப்பாதேவரை மனம் மாற்றி விட்டது. ஏற்கெனவே திட்டமிட்டிருந்த திரைக்கதையை எம்ஜிஆருக்கு ஏற்ப மாற்றம் செய்து நாயகனாக உருவாக வேண்டிய அசோகனுக்கு வில்லன் பாத்திரத்தைக் கொடுத்து எடுக்கப்பட்ட திரைப்படம்தான் தாய் சொல்லைத் தட்டாதே. இந்தப் படம் தேவருக்கு நல்ல இலாபத்தைத் தந்ததால் தொடர்ந்து ”த” வரிசையில் எம்ஜிஆரை வைத்து படங்களை எடுக்க ஆரம்பித்தார். அதேவேளையில் தனது தயாரிப்பில் வெளிவந்த படங்களில் மறக்காமல் அசோகனுக்கு நடிக்க வாயப்பும் கொடுத்துக் கொண்டிருந்தார். தன்னால் நாயகன்அந்தஸ்து அசோகனுக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்ற குற்ற உணர்ச்சியினால்தானோ என்னவோ தன்னுடைய அநேகமான படங்களில் அசோகனுக்கு வாய்ப்புகளை எம்ஜிஆரும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

சில காலங்களுக்குப் பின்னர் எம்ஜிஆரை வைத்து தேவர் எடுத்த தனிப்பிறவி என்ற படத்தில் இதுவரையில் நாயகனாக நடித்துக் கொண்டிருந்த சி.எல்.ஆனந்தனுக்கு வில்லன் பாத்திரம் கொடுக்கப்பட்டது. படத்தில் எம்ஜிஆரிடம் மோதி அடிவாங்கி சி.எல்.ஆனந்தன் தோற்று சிறைக்குப் போவார். இங்கிருந்துதான் சி.எல்.ஆனந்தனை திரையுலகில் இருந்து ஓரம் கட்டும் எம்ஜிஆரின் பணி சத்தமில்லாமல் ஆரம்பமாயிற்று. பின்னாளில் வந்த நீரும் நெருப்பும் படத்தில் வாழைத்தோட்டத்தில் எம்ஜிஆருடன் நடக்கும் வாள் சண்டையில் தோற்று ஆடைகள் இழந்து அவமானப்பட்டு உள்ளாடையுடன் “விஜயபுரி வீரன்“ சி.எல்.ஆனந்தன் ஓடிப் போவார். அந்தப் படத்தில் தோற்று ஓடியவர்தான் பின்னாளில் திரையில் சி.எல்.ஆனந்தனை காணவே முடியவில்லை.அடுத்து எம்ஜிஆருக்குச் சவாலாக இருவர் திரை உலகில் பிரவேசித்தார்கள். ஒருவர் ரவிச்சந்திரன். மற்றவர் ஜெய்சங்கர். இதில் ரவிச்சந்திரன் ஆடல்இ அதிரடி என்று அட்டகாசப் படுத்தினார். ரவிச்சந்திரனின் முதல் படமான காதலிக்க நேரமில்லை வர்ணப் படமாகவும் வியாபார ரீதியாக வெற்றிப் படமாகவும் அமைந்திருந்தது.
இவரது முதல் படம் மட்டுமல்ல அடுத்து வந்த இதயக் கமலமும் ஒரு வெள்ளி விழாப் படமே.

தொடர்ச்சி 23ம் பக்கம்


ஆயுள்வேத வைத்திய நிலையம்

சுகம்! அது நிரந்தரம்!!

டாக்டர்.ஆனந்தி B.S.M.S, A.M.P, S.M.P., R.M.P (Ind) Dipl.Ayurveda(Germany)




எமது வைத்தியத்தில் சிறப்பு
பக்கவிளைவுகள் ஏதும் கிடையாது.

கடந்த 18 வருட காலமாக ஆயுள்வேத
சித்தவைத்தியத்தில் அனுபவமும்
நிபுணத்துவமும் பெற்ற
வைத்தியக்கலாநிதி Dr.ஆனந்தி அவர்கள்
தமது குழுமத்துடன் நடத்திவரும்
அரச அங்கிகாரம் பெற்ற
வைத்திய நிலையம்.


நீரிழிவு நோய் (Diabetes)
இரத்த அழுத்தம் (Blood pressure)
அஸ்மா சளித்தொல்லை,இருமல்
மூட்டுவலீ, கை, கால், உழைவு, செமிபாட்டுப்பிரச்சினை,
தோல்வியாதி, சிறுநநீரகக்கோளாறு.
உடற்பருமன் பிரச்சினை
மற்றும் சலரோகத்தால் ஏற்படும்
ஆண்மைக்குறைபாடுகள்
அனைத்தும் பக்கவிளைவுகள்
அற்றமுறையில்
குணப்படுத்தப்படும்.

Tel:02751 427 9575

Ayurveda Praxis-Am Baumrain 06 / 57319 Bad Berleburg

Möbile: 0175 75 85 952

22 பக்கத் தொடர்ச்சி




எம்ஜிஆரின் பிரதான தயாரிப்பாளராக இருந்த ரி.ஆர்.ராமண்ணா பறக்கும் பாவை படத்தோடு எம்ஜிஆரின் உறவை முறித்துக் கொண்டு ரவிச்சந்திரனை வைத்து நான், குமரிப்பெண்,மகராசி என்று வரிசையாகப் படங்களை எடுக்கத்தொடங்கினார். எம்ஜிஆரைச் சீண்டுவதற்காக, ரவிச்சந்திரனை "சின்ன எம்ஜிஆர்" என அடைமொழி கொடுத்து பொம்மை சினிமா மாத,இதழ் கட்டுரை எழுதி வெளியிட்டது. "வசூலில் கலக்கிறாரே இவர் ரவிச்சந்திரனா? ராமச்சந்திரனா?" என பேசும் படம் இன்னொரு பக்கம் எரியும் நெருப்பில் எண்ணை ஊற்றியது.

எம்ஜிஆரை விட ரவிச்சந்திரனுக்கு ஜெயலலிதா, நாயகியாக சிறப்பாகப் பொருந்துகிறார் என வார சஞ்சிகைகள் விமரசனங்கள் எழுதின. அந்த விமர்ரசனங்களிலும் உண்மை இருந்தது. ரவிச்சந்திரன் ஜெயலலிதா இணைந்து நடித்த மோட்டார் சுந்தரம்பிள்ளை, கௌரி கல்யாணம், நான், குமரிப்பெண், மகராசி என்று எல்லாமே வெற்றிப்படங்களாக அமைந்திருந்தன. ஆனாலும் கதாநாய கனுக்கு முன்னுரிமை உள்ள கதைகளைத் தெரிவு செய்யாமல் ரவிச்சந்திரன் நடித்துக் கொண்டிருந்தார். இது எங்கே போய் முடியும் என்று எம்ஜிஆருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ரவிச்சந்திரனும் ஜெயலலிதாவும் தொடர்ந்து இணைந்து நடிக்காமல் மட்டும் பார்த்துக் கொண்டார். எம்ஜிஆரின் கணிப்பு சரியாகவே இருந்தது. மக்கள் நாயகனாக ரவிச்சந்திரனால் திரையுலகில் நிலைகொள்ள முடியவில்லை.

ஆடல் என்பது ஜெய்சங்கருக்கு சுட்டுப் போட்டாலும் வராது. ஆனாலும் துள்ளிக் குதித்து ஓடுவதும், பாய்ந்து பாய்ந்து சண்டை போடுவதும் அவருக்குப் பல ரசிகர்களை இழுத்து வந்திருந்தது. நடிப்பை முகத்தில் காட்டத் தெரியாது என்றாலும் தென்னகத்து "ஜேம்ஸ் பொண்ட்" என்ற பட்டப் பெயர் அவருக்கு வந்திருந்தது. வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் இவரது படங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

எம்ஜிஆருக்கு மக்கள் திலகம் பட்டம் இருந்தது போல் இவருக்கு மக்கள் கலைஞர் என்ற பட்டம் சேரந்து கொண்டது. இவரை இப்படியே வளர விட்டால் ஐம்பது வயதைத் தாண்டிய தான் திரையுலகில் காணாமல் போய்விடுவேனோ என்று பயந்த எம்ஜிஆரின் அடுத்த திட்டம்தான், ஜெய்சங்கரை தனது படத்தில் நடிக்க வைப்பது என்பது. படத்தில் ஜெய்சங்கருக்கு இரண்டு தட்டுத் தட்டி அவரைக் கீழே விழுத்தி விட்டு, தான்தான் உசத்தி என்று திரையில் காட்டுவதே எம் ஜி ஆரின் பிரதான நோக்கமாக இருந்திருக்க வேண்டும். அதற்காகத் தொடங்கப்பட்ட படம்தான் "ஒரு தாய் மக்கள்" திரைப்படம். எம்ஜிஆர், சரோஜாதேவி ஜெய்சங்கர் நடிக்க அந்தப் படத்திற்காக சில காட்சிகள் எடுக்கப்பட்ட நிலையில், ஜெய்சங்கர் காரணங்கள் சில சொல்லி மெதுவாக படத்தில் இருந்து விலகிக் கொண்டார் பின்னர் அந்தப் படத்தில் எம்ஜிஆருடன் ஜெயலலிதா, முத்துராமன் இணைந்து நடித்தார்கள்.



1967 இல் எம்ஜிஆர் சுடப்பட்ட போது அது அவருக்கு இரட்டைப் பலனைக் கொடுத்தது. அவர் சுடப்படுவதற்கு முன்னர் அவர் நடித்த சில படங்கள் வெற்றியைப் பெறவில்லை. அநேகமான அவரது படங்கள் சுமாரான வெற்றியைத்தான் பெற்றன. ஆனால் எம்ஜிஆர் சுடப்பட்டதன் பின்னர் எழுந்த அலை அவரைத் திரையுலகில் இன்னும் உச்சத்துக்கு கொண்டு போனது. அரசியலிலும் அவர் சார்ந்த திமுக வெற்றி பெற அரசியல் பலமும் அவரிடம் சேர்ந்து கொண்டது.

அதற்குப் பிறகு பெரிய போட்டியாளர்கள் என்று எம்ஜிஆருக்கு எதிராக யாருமே வரவில்லை. கருணாநிதிக்கும் எம்ஜிஆருக்கும் இடையில் மோதல்கள் தொடங்கிய போது கருணாநிதியால் நன்கு திட்டமிட்டு திரையுலகில் களம் இறக்கப்பட்டவர்தான் அவரது மூத்த மகனான மு.க.முத்து.

ஆடல், பாடல், அதிரடி என்று எம்ஜிஆர் போலவே வேசம் கட்டி வந்த மு.க.முத்துவை தனது ஆழ்ந்த அனுபவத்தால் இலகுவாகவே திரையுலகை விட்டே எம்ஜிஆர் வெளியே அனுப்பினார். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்தால் எம்ஜிஆர் திரைக்குப் பின்னாலும் வல்லவர் என்பது பரியும்.

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு
வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும்
மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம் (itec)
International Tamil Educational Cultural Scientific Development Federation

தமிழ்க் கல்வி கலைக் கல்லூரி பீலபெல்ட்
Bielefeld College of Tamil Arts and Education
புத்தாண்டை வரவேற்று

07 Jan.2017
15:00


வாகைசூட்டு விழா 2017

Gymnasium Am Waldhof
Waldhof 8
33602 Bielefeld

07.01.2017 சனிக்கிழமை 15:00 மணி

பத்தொன்பதாவது ஆண்டில்
அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம் (itec)

- அனைத்துலகப்பொதுத்தேர்வு 2016 ல் கலந்து கொண்டு ஜேர்மனி அளவில் வளர்நிலை1 ல் இருந்து ஆண்டு12 வரையுள்ள தரங்களில் தேர்வு எழுதி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கல்.
- இத்தேர்வில் ஆண்டு12 தரத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கல்.
- itec நிறுவகத்தோடு இணைந்து இயங்கும் ஜேர்மனி தமிழ்ப்பள்ளிகள் வழங்கும் கலைநிகழ்வுகள்.
- itec , இருபத்து நான்காம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் பீலபெல்ட் தமிழ்க் கல்வி கலைக் கல்லூரியுடன் இணைந்து நடத்தும் விழா



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Tel: 0049 176 41 41 56 42

## ஆயிரத்தில் ஒருவன் முதல்

# எம்.ஜி.ஆரை பிரியாத ஜெயலலிதா

ஆயிரத்தில் ஒருவனில் தொடங்கி மெரீனா சமாதி வரை... : எம்.ஜி.ஆரை பிரியாத ஜெயலலிதா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடன் ஆயிரத்தில் ஒருவன் திரைப்படத்தில் நடித்த ஜெயலலிதா, அவரைப் போலவே தமிழக மக்கள் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்து இன்று அவர் சமாதி அருகிலேயே அடக்கம் செய்யப்பட உள்ளார்.



தமிழ் திரை உலகிலும், அரசியல் வரலாற்றிலும் எம்.ஜி.ஆர் என்ற மூன் றெழுத்து யாராலும் மறக்க முடியாதது. அதேபோல 1965ல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடன் ஆயிரத்தில் ஒருவன் படத்தில் நடிக்கத் தொடங்கிய ஜெயலலிதா 28 படங்கள் எம்.ஜி.ஆருடன் கதாநாயகியாக நடித்தார். அடிமைப் பெண், கன்னித்தாய், காவல்காரன், அரசக்கட்டளை, தலைவன் என பல படங்களில் நடித்து ராமன்தேடிய சீதை வரை வெற்றிகரமான கதாநாயகியாக உயர்ந்தார்.

அரசியல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் 1972ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் தேதி திமுகவிட்டு நீக்கப்பட்டார். அடுத்த ஒரு வாரத்தில் அதாவது அக்டோபர் 17ம் தேதி அதிமுகவை தொடங்கினார். சரியாக 10 ஆண்டுகள் கழித்து 1982 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆரால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டார் ஜெயலலிதா. கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார். அதிமுக பொதுச்செயலாளர் அதிமுகவை தொடங்கிய முதலே அக்கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த எம்.ஜி.ஆர் மரணம் வரைக்கும் அதிமுகவின் பொதுச்செயலாளராகவும், முதல்வராகவும் வாழ்ந்து மறைந்தார்.

அதேபோல முதல்வர் ஜெயலலிதாவும் கட்சியின் நிரந்தர பொதுச் செயலாளராக இறுதிவரை இருந்து முதல்வராக மறைந்துள்ளார். வரலாற்று வெற்றி முதல்வராக எம்.ஜி.ஆர் இருந்த போது 1984ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் அமெரிக்காவில் இருந்தபடியே வெற்றி பெற்று மூன்றாவது முறையாக வெற்றி பெற்றார். அதே போல ஒரு வரலாற்று சாதனையை ஜெயலலிதா 32 வது ஆண்டுகளுக்குப் பின்னர் படைத்து இரண்டாவது முறையாக வெற்றி பெற்று 6வது முறையாக முதல்வரானார்.

அப்பல்லோ ராசி 1984ம் ஆண்டு அக்டோபர் மாதம் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். உடல்நலக் குறைவால் சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார் எம்.ஜி.ஆர். அதைத் தொடர்ந்து உடல்நிலை மோசமடையவே, அமெரிக்காவிற்கு அழைத்து செல்லப்பட்டார் எம்.ஜி.ஆர். அங்கே தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.
மீண்டும் மறுபிறவி எடுத்து வந்தார். அதேபோல 32 ஆண்டுகளுக்குப்பின்னர் முதல்வர் ஜெயலலிதா உடல் நலக்குறைவு காரணமாக அப்பல்லோவில் 75 நாட்கள் சிகிச்சை பெற்றார். டிசம்பர் ராசி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் 1987ம் ஆண்டு டிசம்பர் 24ம் தேதி நள்ளிரவு மரணமடைந்தார்
அதேபோல 2016ம் ஆண்டு டிசம்பர் 5ம் தேதி இரவு நள்ளிரவில் மரணமடைந்தார்.
மெரினாவில் அடக்கம்: புரட்சித்தலைவர் எம்.ஜி,ஆரின் உடல் அண்ணாவின் இதயக்கனியாக இருந்தார். அவரது சமாதி அருகே அடக்கம் செய்யப்பட்டார். அதேபோல எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசாக இதயக்கனியாக திகழ்ந்த ஜெயலலிதா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சமாதியின் அருகில் இப்போ அடக்கம் செய்யப்பட்டார்..





புரட்சித்தலைவருடன் புரட்சித்தலைவி ஆயிரத்தில் ஒருவனில் தொடங்கிய ஜெயலலிதாவின் பயணம் எம்.ஜி.ஆருடன் அடக்கம் வரை நீடித்தது. இது அதிமுக தொண்டர்களால் வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்வாகும். புரட்சித்தலைவர் என்ற பட்டம் எம்.ஜி.ஆருக்கு எத்தனை பொருத்தமானதோ, அதே போல தமிழக அரசியலில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக அசைக்க முடியாத சக்தியாக தொடர்ந்து இருந்த வந்த ஜெயலலிதாவிற்கு புரட்சித்தலைவி என்ற பட்டமும் பொருத்தமானதுதான் என்கின்றனர் அரசியல் ஆர்வலர்கள்.
அரசியலில் எத்தனை சர்ச்சைகள், இருந்தாலும் மீண்டுமொரு ஊழலில் சிக்காமல், இருந்த கௌரவம், தனக்கென ஒரு குடும்பம், இல்லாது வாழ்ந்த, தவறு செய்யும் அமைச்சர்களை பந்தாடிய, ஸ்ரீலங்கா சிங்களவரின் கேலிக்கு தன்னையோ,தமிழகத்தையே ஆளாக்காமல் அஞ்சி நடுங்கவைத்த,எடுக்கும் முடிவுகளில் மாறாது உறுதியாக நின்ற விடயங்களில் அவர் ஒரு ,இரும்புப்பெண்மணி என்பது உண்மை. பிரதமர், முக்கிய தலைவர்கள் வருகை, ஈழத்திலும் கடையடைப்பு, துக்கதினநிகழ்வுகள் நடக்கும் செய்திகள் அவர் செல்வாக்கை, ஆளுமையை காட்டுகிறது.



## நல்ல நேரம்

கே.எஸ்.சுதாகர்

(50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை)

"பெண்விடுதலையும் மாதர்சங்கமும், ராட்டினம் போல சுழலுறாள்" தினமும் மருமகள் வெளிக்கிடும்போது மாமியாரின் அர்ச்சனை.
ஒருமுறை "தீம் பார்க்"கிற்கு சென்றார்கள். குழந்தைகள் விளையாடுவதைப் பார்க்க மாமியாருக்கு ஆசை வந்தது.

இதுவே நல்லநேரம். மருமகள் சொன்னார்,
"மாமி! ராட்டினத்திலை ஏறுங்கோ. சுப்பரா இருக்கும்."
ராட்டினம் மாமியாரை சுழட்டி ஆட்டியது, உலுப்பியது, தொப்பெனக் கீழே போட்டது. ஐயோ! அலறினார்.
இறங்கியதும் மருமகளை முழுசிப் பார்த்தார். பின்னர் ராட்டினம் என்று மருமகளை என்றுமே சொன்னதில்லை.



# உதயசூரியனின் பார்வையிலே.



## தைப்பொங்கல் சிறப்புக் கட்டுரை

கௌசி

**பத்தாயிரம் ஆண்டுகள் பழமையான அஸிரிய, அகேடிய, பாபிலோனிய நகரங்களின் முக்கிய வழிபாட்டுக்கடவுள் சூரியனே!**

வாழ்க்கை பொங்க வசந்தம் பெருக உள்ளமெல்லாம் பொங்கித் ததும்ப நன்றியை மனமுவந்து நாம் வாழ்வதற்கு ஆதாரமான ஆண்டவன் சூரியபகவானுக்காக நன்றி செலுத்துகின்ற நாளே இந்த பொங்கல் பண்டிகை என்பது யாவரும் அறிந்ததே. உதய சூரியனின் பார்வையிலே உலகம் விழித்துக் கொள்ளும் நாளுமே. அவன் இன்றி உயிர்கள் ஏது? உலகுதான் ஏது? பாரபட்சம் பார்த்து பகலன் கதிர்களைத் தருவதில்லை. அதனால் நாம் நன்றி சொல்லும் மகத்தான பண்புக்கு அடையாளமே இப்பொங்கலின் திருநாளாகும். இதனையே ஜேர்மனியர் Erntedankfest என்று தோட்டங்களில் விளையும் உருளைக்கிழங்கு, பூசணி போன்ற மரக்கறி வகைகளை படைத்துக் கொண்டாடுகின்றார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் நாம் இன்றைய தினம் மாத்திரமே சூரியனுக்கு படையல்கள் படைத்துக் கொண்டாடிவிட்டு வருடம் முழுவதும் சூரியனின் கதிர்கள் எம்மீது விழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால், பத்தாயிரம் ஆண்டுகள் பழமையான அஸிரிய, அகேடிய, பாபிலோனிய நகரங்களின் முக்கிய வழிபாட்டுக்கடவுள் சூரியனே. இவர்கள் சூரியனை ஷாமேஷ் என்று அழைக்கின்றார்கள்.

புத்தி, ஆரோக்கியத்தை அளிக்கும் கடவுளாகக் கருதி எகிப்திய மக்கள் அமான் என்றும் கிராஸ் என்றும் சூரியனையே வழிபடுகின்றனர். வீரம் தரும் கடவுளாக பெரு, மெக்சிக்கோ நாட்டவர்கள் சூரியனை வழிபடுகின்றனர். பெருநாட்டிலுள்ள இன்கா என்னும் பழங்குடியினர் தாங்கள் சூரியனிலிருந்தே வந்தவர்கள் என்று கூறுகின்றனர். ஜப்பானிலும், சீனாவிலும் சூரியன் பெண்கடவுளாக வணங்கப்படுகின்றது.

தைமாதம் பிறக்கும்போது சூரியன் மகரராசியில் பிரவேசிக்கின்றார். இக்காலப்பகுதியில் தட்பமும் வெப்பமும் மிதமாக இருக்கும். இதனால் பயிர்கள் நன்றாக விளைந்து நற்பலனைத் தருகின்றன. அதனால் அப்பலனைத் தரும் சூரியனுக்குப் பொங்கல் படைத்து பொங்கலோ பொங்கல் என்று தமிழரும், ஹங்கரோ, ஹங்கர் என்று ஜப்பானியரும் பொங்கல் விழாக் கொண்டாடுகின்றனர். ஜப்பானியரும் சீனநாட்டவர்களும் சூரியனைப் பெண்தெய்வமாகவே வழிபடுகின்றனர். எமக்கு மாட்டுப் பொங்கல் போல் ஜப்பானியர்களுக்கு குதிரைப்பொங்கல் அமைகின்றது. குதிரைகளை நன்றாகக் கழுவி அலங்கரித்து மாலை போட்டு இனிப்புவகை கொடுத்துக் கொண்டாடுவார்கள். இதேபோல் பர்மாவிலும் இந்நாளில் புத்தாடை அணிந்து கால்நடைகளுக்குப பூஜை செய்வது வழக்கத்தில்இருக்கின்றது.

காலைச்சூரிய வழிபாடு மனிதனுக்குச் சாலச்சிறந்தது என்பது யோகக் கலையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இது இன்று நேற்றல்ல ஆதி மனிதன் கூட சூரியனை வழிபட்டுத் தன் நன்றியைத் தெரிவித்திருக்கின்றான். காயத்திரி, உஷ்ணிக், அனுஷ்டப், பிரஹதி, பங்கதீ, திருஷ்டுப், ஜகதி என்ற பெயர்களையுடைய குதிரைகள் சூரியபகவானை இழுத்து வருவதாக நம்பப்படுகின்றது. சூரியனுக்குரியவையாக தாமிர உலோகம், கோது மைப்பண்டம், செந்தாமரை, செம்பட்டு, கபிலைப்பசு, மாணிக்கம், எருக்கங்குச்சி, காரப்பொருள்கள் போன்றவை கொள்ளப்படுகின்றன. மகரசங்கராந்தி நாளன்று இத்தைப்பொங்கல் கொண்டாடப்படுவதனால், மேற்கு வங்காளத்திலுள்ள சாகர்தீவு ஸ்நான கட்டடத்தில் புனிதநீராடி பிதிர்க்கடன் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்துவருகின்றது.

நாட்டுக்கு நாடு இத்தினம் கொண்டாடப்படும் விதம் வேறுபடுகின்றது. பொதுவாக காதரிசி எனப்படும் வெல்லம் கலந்த பச்சரிசியை ஊறவைத்து அதில் சீனி, ஏலக்காய், பிசைந்த வாழைப்பழம் ஆகியவற்றைக் கலந்து செய்வதுதான் இக்காதரிசி. முதன்முதலாகக் காதுகுத்தும் பிள்ளைகளுக்குக் கொடுப்பதனால் இப்பெயர் வழங்கப்பட்டது. இதனைப் பொங்கல் அன்று படைப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், தற்பொழுது அவரவர் வசதிக்கேற்ப பொங்கல் பண்டிகையைக் கொண்டாடப்படுகின்றது. குளிர் கூடிய ஐரோப்பியநாடுகளில் மின்னடுப்பில் பானை வைத்து வசதிக்கேற்ப சூரியன் வெளிவரும் நேரம் பார்த்து பொங்கல் படைத்து வழிபடுவர். சிலவேளைகளில் அன்றைய பொழுது சூரியன் மேகக்கூட்டங்களுக்குள் மறைந்தே இருப்பார். ஆயினும் காணாத போதும் கண்டதாகக் கருத்தில் கொண்டு பொங்கல் படைத்துத் தம் கலாச்சாரத்தைப் பேணுகின்றனர்.

சூரியன் பற்றிய அற்புத நிகழ்வு ஒன்று கர்நாடக மாநிலத்திலுள்ள வித்யாசங்கர் கோவிலில் நிகழ்கின்றது. இக்கோவிலிலே கிழக்குப் பார்த்த மண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபம் 12 தூண்களினால் தாங்கி நிற்கின்றது. இந்தத் தூண்களின் காலடியில் காலைச்சூரியனின் கதிர்கள் விழுகின்றன. ஒவ்வொரு தமிழ்மாதமும் ஒவ்வொரு தூணாக ஒவ்வொரு தூணின் காலடியில் சூரியக்கதிர்கள் விழுவதுபோல் தூண்களை அக்கால கட்டக்கலைஞர்கள் வடிவமைத்துள்ளனர். வானியல் தெரிந்த இவ்வல்லுனர்கள் பூமி சுழற்சியின் தன்மையை அழகாக இக்கட்டிடக் கலையின் மூலம் கொண்டுவந்திருக்கன்றனர்.

இயற்கையின் வனப்பிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் இயற்கைக்கு நன்றி சொல்லத் தயங்கினால் நன்றிகெட்ட மனிதகளாவோம். அதனால், இது தமிழருக்கு மட்டுமே உரித்தான நாள் என்று கருதாது ஒவ்வொரு மனிதர்களும் கொண்டாடவேண்டிய திருநாள் என்பதை மனம்பதிக்கவென இப்பதிவு தந்துள்ளேன். இப்பதிவுக்கு பெண்மணி சஞ்சிகையின் உதவியும் எனக்குக் கிடைத்தது.








# எத்தனை கல்யணமும் கட்டலாம் எத்தனை கட்டிடமும் கட்டலாம்!

## மேற்குலகில் அது மேன்மை தங்கியவர்களது தனிப்பட்ட சுதந்திரம்

வ.சிவராஜா

உலகின் வல்லரசு, உலகப் பொலிஸ்காரன் நாடு, உலகப் பணக்கார நாடு என்றெல்லாம் அழைக்கப்படும் அமெரிக்க நாட்டின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்றம் அவர்கள் 20.01.2017 தேதியன்று பதவி ஏற்கவுள்ளார். இவர் பற்றிய ஒரு சிறிய குறிப்பை இங்கே குறிப்பிட்டுள்ளோம்.

உலகக்கோடீஸ்வரர், பெரும் வர்த்தகப்புள்ளி, பெரும் பணக்காரர், பெரும் சொத்துக்களுக்கு அதிபதியாவர். வியாபாரம், வர்த்தகத்துறையே இவரின் முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தவர் இன்று அரசியல் அதிகாரம் பொருந்திய ஒரு நாட்டின் தலைவராகத் தெரிவாகியுள்ளார். அரசியல் அனுபவம் குறைவாக இருப்பதால் அமெரிக்க நாட்டை எப்படி வழிநடத்துவார் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அமெரிக்காவின் தற்போதய பொருளாதார நிலை, அரசியல் நெருக்கடி, வேலையில்லாதோர் பிரச்சனை, குடியேற்றவாசிகளின் பிரச்சனை, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், வைத்திய காப்புறுதி, பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நல்லுறவு போன்ற அனைத்திலும் எந்த அளவில் முன்னேற்றம் காண்பார் என்பதைக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். இதனிடையே இவரின் தனிப்பட்ட குடும்ப நிலையையும் பார்த்தால் இவர் தற்போது மூன்றாவது மனைவியுடன் வாழ்ந்து வருகின்றார். 70 வயது நிரம்பிய இவரின் தற்போதய மனைவியின் வயது 46 ஆகும்...





**முதலாவது மனைவி** Ivana Trump

67 வயது. உயிருடன் இருக்கிறார். 1977ல் மணம் முடித்தவர். 1992ல் பிரிந்துவிட்டார். இவர் செக் குடியரசு (ஐரோப்பா) நாட்டைச் சேர்ந்தவர். நிழல்ப்படப் போட்டோ அழகியாக இருந்தவர். இவருக்கு 3 பிள்ளைகள் (2 ஆண் 1பெண்)

**இரண்டாவது மனைவி** Maria Maplel Trump

அமெரிக்க நாட்டவரான இவர் ஓர் நடிகை மட்டுமல்ல மொடல் அழகியுமாவர். 53 வயது. உயிருடன் இருக்கிறார். 1993ல் திருமணமாகி 1999ல் விவாகரத்துப் பெற்றார். இவருக்கு 23 வயதில் ஒரு மகளும் உண்டு அவர் பெயர் Tiffany Trump இவரும் ஒரு பாடகி மட்டுமல்ல நிழல்ப்பட போட்டோ அழகியுமாவர்.

மூன்றாவது மனைவி - Melania Traump

இவர்தான் தற்போது ஜனாதிபதி ட்றம் அவர்களின் மனைவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவருக்கு வயது 46. இவர் ஸ்லோவேனியா (ஐரோப்பா) நாட்டவராவர். 2005ல் திருமணம் முடித்தார். இவரும் நிழல்ப்பட மொடல் அழகியாவர். இவருக்கும் பத்து வயதில் ஒரு மகன் உண்டு. அவர் பெயர் Barron Trump

ஜனாதிபதி டொனால்ட் ட்றம் அவர்கள் பெரும் கோடீஸ்வரர் ஆவர். உலகிலுள்ள கோடீஸ்வரர்களில் முதன்மையானவர்களில் இவரும் ஒருவராக விளங்குகின்றார். இன்று உலகமெல்லாம் பேசப்படும் இவருக்கு பெரும் கட்டிடங்களும் உண்டு. பங்குச் சந்தை அதிபதி. வர்த்தக வியாபார தொழில்களில் பெரும் பங்கு வகிக்கின்றார். பல கொட்டல்களுக்கும் கம்பனிகளுக்கும் அதிபதியான இவரின் சொத்துக்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.




தனது பிரயாணத்துக்குகென தனிப்பட்ட பெரிய விமானம் ஒன்றையும் வைத் திருக்கும் இவர் உள்நாட்டுக் குறுகியதுாரப் பயணங்களுக்காக உலங்கு வானூர்திகளையும் (கெலிகெப்டர்) சொந்தமாக வைத்திருக்கின்றார். இப்படியாக இவரின் சொத்துக்களையும் முதலீடுகளையும் பார்த்தால் எமது நாடான இலங்கைக்கு வருடம் முழுவதும் சாப்பாடு வழங்கக்கூடிய பணவசதிபடைத்தவர் என்றுதான் கூறவேண்டும். இப்படிப்பட்ட இவருக்கு அரசியல் அனுபவம் குறைவாக இருப்பினும் சொத்துக்களின், வர்த்தக நடவடிக்கைகளின் அனுபவம் நிறையவே காணப்படுகின்றன. அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இவருக்குச் சொந்தமான சில கட்டிடங்கள் அமெரிக்காவில் மட்டுமல்ல பிறநாடுகளிலும் உண்டு. (பனாமா, தென்கொரியா, கனடா, அயர்லாந்து, பிரேசில்) வேறு பல நாடுகளிலும் கம்பனிகளை நிறுவிக் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார். அவர் பெயரிலுள்ள கட்டிடங்களை கீழே உள்ள படங்களில் காணலாம். கட்டிடங்களின் பெயர் அவை அமைந்துள்ள நகரங்களும் நாடுகளும்



1-Trump Tower - NewYork -U S A
2-Trump Tower Sunny Isles -Florida-U S A
3-Trump HollyWood-Florida -U S A
4-Trump Ocean Club -PanamaTown -Panaman
5-Trump International Hotel and Tower -Vancouver -Canada
6-Trump World -Seoul -South Koria
7-Trump International GolfLinks and Hotel -IrlandTown -Irland
8-Trump Tower (Planing) -Rio de Janerio -Brasil

## அடுப்படி 19



புவனம் தர்மரட்ணம்

### இஞ்சி நட் சீஸ்கேக்
### Ginger nut cheesecake

**தேவையான பொருட்கள்**

மஸ்காபான் சீஸ் (Mascarpone) 300g
அரைத்த சீனி (Caster sugar) 125g
டபுள் கிறீம் (Double cream) 250ml
வனிலா 1. Nk.fuz;b
இஞ்சி பிஸ்கட் 225g
தூள் சொக்கலேற் தே. அளவு
தேசிக்காய் 1அதன் தோல் துருவியது
பட்டர் Tray. க்கு பூச Foil paper


செய்யுயும் முறை

**Mascarpone, miujJ** சீனி, கிறீமை நன்றாக அடிக்கவும். வனிலா,தேசிக்காய் புளி,அதன் துருவிய தோல், எல்லாவற்றையும் சேர்த்து கலந்து வைக்கவும். பிஸ்கட்டை கிறைண்டரில் தூளாக அரைத்து பின் ஒரு அளவான Tray இல் பட்டர் தடவி அதில் பிஸ்கட் தூளை பரவிய பின், கலந்து வைத்த கிறீமை பரவி பிஸ்கட் தூளை தூவி , அதன் மேல் சொக்கலேற் தூளை தூவி Foil paper ஆல் இறுக்கமாக மூடி குளிர்சாதனப் பெட்டியில் 4-5மணி நேரம் வைத்து பரிமாறவும்.

10-12 பேருக்கு போதுமானது



பின் குறிப்பு
விரும்பினால் செறிப்பழம் வைத்தும் அலங்கரிக்கலாம்



# திருமந்திரமும் வாழ்வியலும் 14

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் கல்லாமை

பல நூல் கற்றும் இறைஅருள் இல்லை எனில் அவர்கள் கல்லாதவர்களே.
கல்லாமை பற்றிக் கூறும் பாடல் எண் 310

“கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லார் எனில்அருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற்றா நிற்பர் கற்றோரும்
கல்லாதார் இன்பங் காணுகி லாரே”

பள்ளியில் அல்லது ஆசிரியரிடம் சென்று முறையாகக் கல்வி கற்காதவர் என்றாலும், அவர்கள் தங்கள் நெஞ்சுக்குள் இறைகாட்சியைக் காணும் மனப்பக்குவம் பெற்றவர்களாயிருப்பின், அவர்களை இறைவன் தன் அருட் பார்வையால் ஆட்கொள்வான். இப்படிப்பட்ட மனப்பக்குவம் வாய்க்கப் பெற்றவர்கள் மற்றவர்கள் கூறுவதை ஏற்காமல் சிவ சிந்தனையையே பற்றாகக் கொண்டிருப்பர். இந்த அனுபவம் இல்லாதவர்கள் பல நூல் கற்றவரேனும் கல்லாதவர்களாகவே கருதப்படுவர். இப்படிப்பட்டவர்கள் இறை இன்பம் காண இயலாதவர்கள்.
கல்லாதார் காண மாட்டார் எனக் கூறும் பாடல் எண் 311

“வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லா தவர்கள் அறிவு பலஎன்பர்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே”

பக்தி உணர்வால் மனவலிமையும், மனப்பக்குவமும் அடையப் பெற்றவர்கள், இறைவன் ஒருவனே என்பதை உணர்ந்து, அவன் அருளைப் பெறும் வழியில் மனம் ஒன்றி இருப்பார்கள். இந்த அனுபவ ஞானம் அடையப் பெறாதவர்கள், இறைவனை அடையப் பல மார்க்கங்கள் உள்ளன என்று கூறுவர். எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்து நிற்கின்ற எம் ஈசனைக் கற்றறிவில்லாத மூடர்கள் அறிந்துணர மாட்டார்கள்.
கல்லாதார் நெஞ்சத்துள் கடவுள் நில்லான் எனக் கூறும் பாடல் எண் 312

“நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென்(று) உணர்வீர்காள்
எல்லா உயிர்க்கும் இறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணஒண் ணாதே”

உலகில் நிலைத்து நிற்காத, அழியக்கூடியவற்றை எல்லாம், அவை என்றும் நிலையாக நீடித்து இருக்கப் போகின்றவை என்ற நினைப்பில், அழிந்துவிடக் கூடிய இந்த உடம்பையும் நிலையானது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்கள். ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் தலைவன் இறைவனே. என்றாலும் கற்றறியா மூடர்கள் மனதுள் இறைவனைக் காணமாட்டார்கள்.

அறிவெனப்படுவது அவனருள் நாடல் எனக்கூறும் பாடல் எண் 313
“கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லேன் அரநெறி அறியாத தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுள்
கல்லேன் கழியநின்று ஆடவல் லேன்”



ஆற்றல் இல்லாதவன் இறை உணர்வை அறிய இயலாதவன். எனவே வினைப்பயனால் வரும் துன்பங்களுக்கு ஆட்பட்டுத் தடுமாறுகிறேன்.

நீதி நூல்கள் கூறும் அற உரைகள் நன்னெறிகளின்படி நடக்கத் தெரியாத இயல்புடையவன் நான்.

வேண்டியவர்க்கு வேண்டியதை வழங்கும் பரம்பொருளை மனத்துள் எண்ணித் துதிக்க முடியாமல், அதற்கு வழியறியாமல், வாழ்நாள் வீணே கழிய, உலக இன்பங்களில் மூழ்கித் திளைப்பவனாக நான் இருக்கின்றேனே!.

கல்வி அறிவின் பயனை கூறும் பாடல் எண் 314

“நில்லாது சீவன் நிலையன்றென் றெண்ணி
வல்லார் அறத்தும் தவத்துளும் ஆயினர்
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகம்செய் வாரே”

உடலில் பொருந்தியுள்ள உயிர் எப்போதும் அதிலேயே நிலைத்து நிற்காது என்பதை உணர்ந்துஇ கல்வி கேள்விகளில் சிறந்த அறிவுடைய பெரியோர்கள்இ அறச் செயல்களில் ஈடுபடவும், தவம் செய்யவும் முயலுவார்கள்.

கல்வி அறிவற்ற மூடர்களோ, கீழ்மக்களாக, உலகில் வாழ்ந்துகொண்டு பிறவித் துயருக்குக் காரணமான சிற்றின்பச் செயல்களில் ஈடுபட்டுப் பாவத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பார்கள்.
கற்றவர் அறியும் கணக்கை பற்றி கூறும் பாடல் எண் 316

“கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டுஅண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே”

“ஓம்” என்னும் பிரணவ மூல மந்திரத்தையும், பரம்பொருளான சிவ பெருமானுடைய ஐந்தெழுத்து “சிவாயநம” மந்திரத்தையும் உணர்ந்து ஓதுபவர் களுக்கு அன்றி மற்றவர்களுக்குச் சிவன் காட்சி சித்திக்காது.

அவனருளை உணரவும் இயலாது. இதை அறிந்து இறையருள் சமீபமாகச் செல்லும் சாதகர்களே கற்றவர்கள் என்று கருதப்படுவர்.
கல்லாரைக் காணவும் கூடாது எனக் கூறும் பாடல் எண் 317

“கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே”

ஞானமாகிய கல்வி அறிவைப் பெறாதவர்கள் மூடர்கள். இவர்களைக் காணவும் கூடாது. கற்றறியா மூடர்கள் கூறும் வாய்ச்சொல் கேட்க வேண்டும் என்பது கட்டாயமும் அல்ல. அறிவற்ற மூடர்களுக்கு அவர்களைப் போன்ற அறிவில்லாத அசடர்களே நல்லவராக, நண்பர்களாகத் தெரிவார்கள்.

ஏன் எனில் கல்லாத மூடர்களில் கருத்து வேறுபாடு ஏற்படாது. இருவரும் ஒத்துப் போவார்கள்.
ஒருவர் சொல்வதை மற்றவர் ஏற்றும் கொள்வார். எனவேதான் கல்லாத மூடர்களுக்குக் கல்லாதார் நல்லவராகத் தெரிகின்றனர்.


திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!

KS Services
EVENT MANAGEMENT








E-Mail. info@ksservices.de Web. www.ksservices.de




Berliner Str. 49- 40880 Ratingen

Tel. 0049 21025300247 Mobil. 004917610247194
00491722192035


உங்கள் திருநாளுக்கு தொலை தூரத்தில் நாங்கள் இல்லை! இன்றும் என்றும் உங்களோடு நாங்கள்!!!
Thushi -Deko
உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....
Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram
நீங்கள் காணும் அலங்கார மணவறைகள்
யாவும் கனவல்ல நிஜயங்களே!
எம் கையிருப்பில்
அத்தனையும் நிஜயங்களும்!
அனைவருக்கும் எங்கள்
இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்
Tel:02305 - 85945 - 0176 608 108 13
Thushiyanthan.
Thiruselvam


Dortmund நகரில்
மங்களகரமான திறப்புவிழா
K.K.L
Textilien Schmuck Haushaltsware
12.01.2017
வியாழக்கிழமை
காலை 10.00 மணி
அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
திருமணப் பட்டுச்சேலைகள்
பாட்டிசாறிகள் பஞ்சாபிகள்
மற்றும் அழகிய
இமிரேஷன் நகைகள்
அனைத்திற்கும்
உங்கள் மனதில்
உதயமாகிறது
K.K.L
திறப்பு விழாவை முன்னிட்டு
அனைத்து ஆடைகளும்
40% முதல் 50% வரை
கழிவு விலையில் ....
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உங்கள் பற்றுச்சீட்டை
பதிவு செய்யுங்கள்
மாசி 14 (Feb14)வைலன்ரைன்ஸ்
தினத்தில்
3 பரிசுகள் குலுக்கல் முறையில்
தெரிவாகும்.
வீட்டுச் சமையல் உபகரணங்கள்
கிறைண்டர், மிக்சி, அனைத்திற்கும் நாடுங்கள்
சேலைகளுக்கு பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும்.
Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610



# காலமும் கணிதமும்

D.J வினோ

அன்றும் இன்றும் என்றும் காலங்களின் மாற்றம் கலாச்சார மாற்றம் என்று கதைபேசி வரும் நாம், பல ஒற்றுமைகளை பேச மறந்து போகின்றோம். காலங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றது. அளவற்ற அறிவியல் வளர்ந்துவிட்டது என்று, அனைவரும் கருதுகின்றோம், ஆனால் எதனோடு ஒப்பிட்டு அறிவியல் வளர்ச்சியின் தன்மையைப் பேசுகின்றோம் என்பதை மறந்துவிடுகின்றோம். கையில் வைத்தே கண்டம் கடந்து கண்டு மகிழ மிடுக்குத் தொலைபேசியுண்டு (Smart Phone). ஆனால் இதே தொழில்நுட்பம் 20000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் கையிலும் இருந்திருக்காதா என்பதை எவரும் சிந்தித்ததே இல்லை.

தொழில் நுட்பத்தில் இன்றும் நாம் பெரிதாக ஒன்றும் வளர்ச்சி காணவில்லை என்பதற்கு உதாரணம் சொல்லவேண்டும் என்றால், இன்றும், நாம் வசிக்கும் உலகம் ஆபத்தில் தான் உள்ளது எந்த வேளையும் அழிவு வரும் என்ற நிலை தான் உள்ளது. இருண்ட கோள் என்ற ஒரு கோள் இந்தப் பூமியின் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்து சுற்றக் கூடிய தன்மையுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதே சமயம், மனிதர்களாகிய நாம் பூமியில் புதிய கண்டு பிடிப்பு ஆராய்ச்சி என்று பூமியின் கால நிலையை மாற்றி வருகின்றோம்.

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த கிபி 21 நூற்றாண்டில் நாம் அனுபவிக்கும் தொழிநுட்பம் ஆடம்பரம் என்பதையும் தாண்டி கிமுவில் வாழ்ந்த மனிதர்கள் பலமடங்கு அறிவார்ந்த தொழில்நுட்ப ஆற்றலுடன் இருந்திருக்க வாய்ப்புக்கள் இருக்கிறது. ஆனால் அப்படி அறிவாற்றல் கொண்ட அவர்களும் காலவோட்டத்தில் அழிந்திருக்கின்றார்கள். காரணம், பூமியின் இசைவாக்கத்திலே தான் மனிதர்கள் மகிழ்ந்து வாழமுடியும். அனைத்து உயிர்களும் இணைந்து வாழ முடியும். குறிப்பிட்ட காலத்திற்கு பூமி தன் நிலையை மாற்றிக் கொண்டு உயிர்வாழ்க்கைக்கு தடை விதித்தால். அனைத்து உயிர்களும் அழிந்துவிடும். அங்கு மீள்சுழற்சி ஏற்படும்.

இது தான் இங்கு நிகழ்ந்து வருகின்றது. நாம், நம் உலகம் மட்டும் தான் இயற்கை என்று எண்ணிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் நம் உலகைத் தாண்டி சூரியன், கோள்கள், நட்சத்திரங்கள், பால்வெளி, வால்வெள்ளி என்று பல கோடி பொருட்கள் கணக்கில் அடங்காமல் இயற்கை என்ற கட்டமைப்பிற்குள் வருகின்றன. இவற்றையெல்லாம் கணக்கிட எம் மூதாதையர்கள் கற்று வைத்துள்ளனர், அதில் ஒன்று தான் பஞ்சாங்கம். இந்த பஞ்சாங்கக் கணக்கு புரியாமலேயே அதை ஆராயாமலேயே பலர் அதில் உள்ள விஞ்ஞாத்தை மதம் என்ற பார்வையில்ப் பார்த்து தள்ளி வைக்கின்றனர். ஒருசிலர் மூட நம்பிக்கை என்றும் சொல்கின்றனர்.

பஞ்சாங்கம் என்றால் என்னவென்று பார்க்க ஒரு நாள் போதாது. அதே பஞ்சாங்கத்தை முழுமையாகவும் நுட்பமாகவும் கற்றுக்கொள்ள ஒரு மனித வாழ்க்கை பற்றாது. அப்படிப் பட்ட பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கம் என்று பொருள். ஐந்து அங்கங்களும் எவை என்றால் திதி, வாரம், நட்சத்திர, யோகம், கர்ணம். இந்த ஐந்து அங்கங்களையும் கணிக்க இன்றைய நவீன விஞ்ஞானமே தள்ளாடி வருகின்றது. இவற்றைத் துல்லியமாகக் கணித்து அதன் மூலமாக மனிதனது குணாதிசயம் எதிர்காலம் என்று அனைத்தையும் கணிப்பது ஒருவகை தெய்வீகக் கலையாகும்.

இந்த ஐந்து அங்கத்தில் திதி என்றால் சந்திரன் அமாவாசை தொடங்கி அடுத்த அமாவாசை வரும் வரை பூச்சியம் பாகையில் இருந்து 360 பாகை பூமியைச் சுற்றி வருகின்றது இதன் வகையில் தினமும் 12 பாகை சுற்றிவரும் இந்த சந்திரனின் ஒவ்வொரு 12 பாகை நகர்வும் ஒவ்வொரு திதியாகக் கணக்கிடப்படுகின்றது. வாரம் என்பது எமக்கு நன்றாகத் தெரியும் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி ஆனால் இந்த ஒழுங்குமுறை எவ்வாறு தோன்றியதென்பது பலர் அறிந்திலர் இதோ அதற்கான விளக்கம். பூமியின் இயக்கத்திற்கும் உயிர்வாழ்க்கைக்கும் ஆதாரமான சூரியன், அதில் இருந்து ஒளி தெறித்து இரவில் வெளிச்சம் தரும் சந்திரன், அதைத் தொடர்ந்து செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்று கோள்களையும் இணைத்து வாரம் என்று ஏழு நாட்களை உருவாக்கினார். சந்திரன் பூமியைச் சுற்றிவரும் போது ஒவ்வொரு நாளும் சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரக் கூட்டத்துடன் சேர்ந்து காணப்படும். இந்த நட்சத்திரக் கூட்டமே அந்த நாளின் நட்சத்திரம் என்று கூறப்படுகின்றது. யோகம் என்றால் சந்திரன் பூமியை முழுமையாகச் சுற்ற 360 பாகை சுற்றி வரும் போது அதில் ஒவ்வொரு 13,2 பாகையும் யோகம் என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறு சந்திரன் முழுமையாக பூமியை ஒருமுறை சுற்றிவரும் போது 27 யோகம் ஏற்படுகின்றது. ஒரு நாள் என்றால் நாம் 24 மணித்தியாலம் என்று கூறுகின்றோம் ஆனால் பஞ்சாங்கத்தில் ஒரு நாள் என்றால் 60 நாழிகை என்று கூறப்படுகின்றது ஆகவே 1 நாழிகை என்றால் 24 நிமிடங்களாகும். ஒரு நாழிகையில் பூமி 6 பாகை சுழர்கின்றது இந்த ஒவ்வொரு ஆறு பாகை சுழற்சியையும் கர்ணம் என்று கூறுகின்றனர்.

இவ்வாறே மாதம் ராசி என்று பஞ்சாங்கத்தின் பிரிவுகள் அதிகரிக்கின்றன. இவற்றைக் கொண்டு மனிதனின் குணாதிசயம் நடந்தவைகள் நல்லது கெட்டது நடக்க இருக்கும் எதிர்காலம் என்று பலதையும் ஆராய்ந்து சொன் னார்கள் எம் முன்னோர்கள், ஆனால் இன்றைய அதி புத்திசாலி அறிவியல் ஞானிகள் ஒரு ஒன்பது கட்டங்களையும் கோள், நட்ச்சத்திரங்களையும் கொண்டு எவ்வாறு மில்லியன் கணக்கான மக்களின் குணாதிசயத்தைக் கணிக்க முடியும் என்று கேட்க்கின்றனர், சிறிதும் சிந்திக்காமல் இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டு புத்திசாலித் தனமாய் கேட்டு விட்டோம் என்று சிரிக்கின்றனர். இதற்க்கு பதில் கூற வேண்டும் என்றால் நவீன விஞ்ஞானத் தையே உதாரணமாகக் காட்ட முடியும். கணனி இயங்குவதற்கு இரண்டு இலக்கங்கள் மட்டுமே பயன் படுகின்றன 0 மற்றும் 1 இவை இரண்டையும் மட்டும் பயன்படுத்தி மில்லியன் பில்லியன் திரிலியன் கணக்கான தகவல் களை பதிகின்றனர். அது எவ்வாறு சாத்தியமோ அது போன்றே இந்தக் கட்டங்களும் சாத்தியமே. ஒரு தாவரத்தில் பூ எப்போது பூக்கும் காய் எப்போது வரும் கனி கனியும் காலம் என்று அனைத்தையும் விவசாயி அறிவது போன்று, பஞ்சாங்கத்தை முறையாய்க் கற்றவருக்கு காலத்தைக் கணித்து யோகத்தைச் சொல்லும் திறமை உண்டு.

இத்தனை கலை கற்றுக் கொண்டு கணித்து வாழ்ந்த முன்னோர்கள் செய்த மிகப் பெரும் பிழை தம் திறமைகள் தலை முறை கடந்து பிரதிபலிக்க வைக்காமல் விட்டதே ஆகும். அதே தவறைத் தான் நாமும் செய்துவருகின்றோம். இன்றும் இந்து சமுத்திரத்தில் எத்தனையோ மலைகள் மூழ்கிக் கிடக்கின்றன, என்றால் அதன் மூலம் நாம் இதுவரையும் ஒரு பாடம் கூட கற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மை. எவ்வாறு எம் முன்னோர் களின் சரித்திரம் சமுத்திரத்தில் புதைந்திருக்கக் கூடும். இன்று வர இருக்கும் அதே இருண்ட கோள் அன்றும் வந்திருக்கலாம் அதன் இழுவிசை காரணமாக பூமியில் ஈர்ப்பு விசையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். அந்த ஈர்ப்புவிசை மாற்றம் காரணமாக புவியில் இருந்த அசையும் இயல்பு கொண்ட காற்று நீர் இரண்டும் பாதிப்படைந்து பெரும் நீர்பெருக்காக முன்னோர்களை அழித்திருக்க வாய்பிருக்கின்றது.

அவ்வாறு ஒரு அழிவு இப்போது ஏற்பட்டால். மனிதகுலம் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து அனைத்தையும் ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகும். அதே சமயம் பல நூற்றாண்டிற்குப் பின் வரும் புதிய மனித குலத்திற்கு நாம் எம் அறிவியல்த் தொழிநுட்பத்தை எவ்வாறு காண்பிக்க முடியும் என்பதை கண்டிப்பாக சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இல்லை என்றால் எம் முன்னோர்களின் அறிவியல் திறமை எப்படி எமக்குத் தெரியாமல் பொய் விட்டதோ அதே போல் எதிர்கால மனித குலத்திற்கும் எம் அறிவியல் தெரியாமல் அழிந்துவிடும். அதற்கான தீர்வும் எம் தமிழ் மொழியில் உண்டு.





சிவ பார்வதி ஜோதிட நிலயம்

SHIVA PARVATI ASTROLOGY CENTRE

சோதிட துறையில் 9 வது சந்ததியினரும்
உலகப் புகழ் பெற்ற சோதிட, கைரேகை நிபுணர்
பண்டித் காளிதாஸ்
Pandith Kallidas




உங்கள் பிரச்சினைகளுக்கு
உடனடி ஆலோசனையும் தீர்வும்
நீங்கள் நீண்டகால நோய்யால்
அவதியுறுகின்றீர்களா?
கல்வி, வேலை, வாய்ப்பு பிரச்சினைகள்,
காதல் விவகாரங்கள்,திருமணம்,கணவன்
மனைவி உறவு, பணம் செலவு, காணி

வழக்குகள், உடல் நோய்கள், பிள்ளைப்பேறு,
எந்த விதமான பிரச்சினைகளாக இருந்தாலும்
தீர்வு காணப்படும்.100 வீதம் தீர்வு
உத்தரவாதம் இன்றே எம்மைக்காண
நேரத்தைப் பதிவு செய்யுங்கள்

தொடர்பு மொழி:
தமிழ் கிந்தி ஆங்கிலம் கன்டம் தெலுங்கு
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9:00 மணி முதல் மாலை 6:00 வரை

Pandith Kallidas
Wilhelm Str.27
59067 Hamm
+49(0) 151 44 921 486
+49(0) 152 15 670 175




Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

# எப்படிப்பட்டவர்கள் சொத்து வரியை பற்றி அதிக கவனம் எடுக்க வேண்டும்?

எப்படிப்பட்டவர்கள் சொத்து வரியை பற்றி அதிக கவனம் எடுக்க வேண்டும்?

**தங்களின் வீட்டின் விலை £1 மில்லியனுக்கு அதிகமாக இருப்பின்.**

6ம் திகதி சித்திரை 2020 முதல் இறப்பு ஏற்படின் அதிக கூடிய விதிவிலக்கு (exemption) பணம் கீழே குறிப்பிட்டவாறு இருக்கும்.

| | |
|---|---|
| இறப்பு 2016/2017 | £650,000 |
| இறப்பு 2017/2018 | £850,000 |
| இறப்பு 2018/2019 | £900,000 |
| இறப்பு 2019/2020 | £950,000 |

Residential care **(குடியிருப்பு பராமரிப்பு)**

சொத்து வரி என்பது பலருக்கு பல கவலைகளை கொடுத்தாலும், சிலருக்கு இருக்கும் பெரிய கவலை என்பது nursing home அல்லது residential care fees ற்கு தம்முடைய வீட்டை local authority ற்கு விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது என்பது ஆகும்.

**உயில் (Will) இல்லாமல் இறக்கும் பொழுது என்ன நடக்கமுடியும்?**



IF you leave a spouse and issue:

முதல் £250,000 அத்துடன் எல்லா சொந்த உடமைகளும் spouse ற்கு போய் சேரும். மிகுதி 50% பிள்ளைக்கு சமனாக பங்கிட்டு கொடுக்கபடும். பின்னர் இருக்கும் மிகுதி 50% "trust" ற்கு வைக்கப்பட்டு spouse life interest உள்ளவராக கருதப்பட்டு பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும்.

If you leave a spouse but no issue:

உடன பிறப்புகள், பெற்றோர், மைத்துனர்கள், மருமகன்கள், எவரும் இல்லாவிட்டால் முழு சொத்தும் spouse ற்கு கொடுக்கப்படும், இல்லாவிட்டால் spouse இன் பங்கு £450,000 ஆக மட்டுப்படுத்தப்பட்டு (அத்துடன் எல்லா சொந்த உடமைகளும்) மிகுதி 50% உட்பட.

If you leave issue but no spouse:

## தங்களின் சொத்து பிள்ளைகளுக்கு சமனாக பகிர்ந்து கொடுக்கப்படும்.

Family Home/ Inheritance tax



சொத்து வரி (inheritance tax) ஒருவரின் இறப்பின் பொழுது செலுத்தப்படுகின்றது. ஆனால் இந்த சொத்து வரியை தூண்டுவது (Trigger) ஒருவரின் இறப்பை விட பரிமாற்ற மதிப்பு (transfer value) என்பதே உண்மையானதாகும். பலவிதமான விதிவிலக்குகள் (exemptions) இருப்பதனால் இவைகளை பயன்படுத்துவதன் மூலம் 40 வீதம் IHT செலுத்துவதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

**குடியிருக்கும் வீடு** (family Home)

6 ம் திகதி சித்திரை 2020 தொடக்கம் கீழ்வரும் விதிவிலக்குகள் கிடைப்பதனால் அனேகமாக £1 மில்லியன் வரை பெறுமதியான வீட்டு பெறுமதிக்கு எந்த வரியும் செலுத்தத் தேவையில்லை.

| | |
|---|---|
| NIL Rate Brand | £325,000 |
| Transferable nilrate band | £325,000 |
| Residence Nilrate band | £175,000 |
| Transferable residence Nil | £175,000 |
| | = £ 1,000,000 |

அனேகமான திருமணமான தம்பதிகள், விதவைகள், தங்களுடைய வசிக்கும் வீட்டை தங்களின் பிள்ளைகளுக்கு கொடுக்கும் பொழுது £1 மில்லியன் வரையிலான விதிவிலக்குகள் இருப்பதால், வீட்டினால் செலுத்தப்பட இருக்கும் சொத்து வரியை பற்றி கவலைப்படாமல் மற்றைய சொத்துகள் (asset) மூலம் செலுத்தப்பட இருக்கும் சொத்து வரியை பற்றியே அதிக கவனம் செலுத்த வேண்டும்.

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திரனியல்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main






# இளமையிற் கல்வி சிலையில் எழுத்து



**(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)**

நம் முன்னோர்களின் வாழ்வியலை நாம் நன்கு அறிவதற்கு பழமொழிகளும் சான்றாக உள்ளன. பழமொழிகள் பட்டறிவை வெளிப படுத்தி நிற்பவை. தமிழ் மொழியின் ஆற்றலை அறிய வைப்பவை. சிறிய சொற்றொடராக அமைந்து அரிய பெரிய விளக்கங்களைத் தருபவை. நமது நினைவிலே நீண்ட காலம் நிலைத்து நிற்பவை. எனவே இன்று பழமொழிகள் கூறும் செய்திகளை மீள நோக்குவது பயனுடைத்து.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது கல்வி. இன்று கல்வி பற்றிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலைத்தேய நாடுகளில் கல்வி பற்றிய கோட்பாடுகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் செயற்பாட்டு நிலையில் அவை இன்னமும் தேர்ச்சிநிலையை முழுதாக அடையவில்லை. எனவே இன்று நாம் முன்னோருடைய முதுமொழிகளான பழமொழிகளின் வழிகாட்டலைத் தேடவேண்டி உள்ளது.

மனிதன் தேடவேண்டிய செல்வங்களில் முதல்நிலை வகிப்பது கல்வியே. வள்ளுவர் கல்வியே கேடில்லா விழுச் செல்வம் எனப் பதிவுசெய்துள்ளார். விழுச் செல்வம் என்பது சீரான செல்வமாகும். ஆனால் இந்தச் சீரான செல்வத்தை எப்போது தேடுவது நல்லது என அவர் குறிப்பிடவில்லை. பழமொழி, கல்வியை எப்போது தேடினால் நல்லதென விளக்கியுள்ளது. கல்விச் செல்வத்தை இளமையிலே ஈட்டவேண்டும். பொருட் செல்வத்தை ஈட்டுவதற்குக் குறிப்பிட்ட ஒரு வயது வரவேண்டும். சிறுவர்கள் தொழில் செய்து பொருள் தேடுவது நல்லதல்ல. ஆனால் கல்விச் செல்வத்தை சிறு வயதிலேயே ஈட்ட முடியும். இளமையிலே கற்கின்ற கல்வி கல்லிலே எழுதிய பதிவைப் போன்றது. காலத்தால் அழியாதது.

நமது முன்னோர்கள் கல்லிலே பல வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவுசெய்து வைத்துள்ளனர். இன்று அவை நமக்கு வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன. ஏட்டிலே எழுதி வைக்கின்ற தொழில்நுட்பம் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் கல்லிலே செய்திகளைப் பதியும் வழக்கம் இருந்தது. அவை கல்வெட்டுகள் என அழைக்கப்பட்டன. அவ்வாறு எழுதுவதைக் 'குயில்தல்' என்பர். அவ்வெழுத்துகளைக் கல்லிலே பொறிப்பது கடினமான செயற்பாடு எனினும் அவை காலங்காலமாக அழியாமல் நிலைத்திருக்கும்.இளமையிலே கற்கின்ற கல்வியும் அத்தகையதே. மனதிலே அழியாமல் பதிந்துவிடும்.

இளமைக்காலம் எல்லோரும் உடல்நலமும் வலுவும் பெற்று வாழும் காலமாகும். எனவே இக்காலத்தில் கல்வியைப் பயில வேண்டும். குறிப்பாக ஒரு பள்ளியிலே கல்வியை ஒழுங்காகக் கற்க வேண்டும். ஆசிரியர்களுடைய வழிகாட்டலிலே கல்வியைப் பெறவேண்டும். ஆசிரியர் பல மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவர். குழுநிலையிலே மாணவர்களை ஆற்றுப்படுத்துவர். கல்வியைத் தனியாக இளமையில் கற்பது பயன்தராது. ஏனெனில் இளமைப் பருவம் துடிப்பானது. தோழமையை நம்புவது. பள்ளிக்காலம் பலரோடு பழக வாய்ப்பளிப்பது.

எனவே இளமையில் பெறும் கல்வியால் எதிர்காலப் பயன் என்ன என்பதையும் அறிவது நன்று. முதுரை என்னும் நூலில் அப்பயன் வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு. (பாடல்: 26)

அரசனையும் அறிஞனையும் ஒப்பிட்டால் அறிஞனே சிறந்தவன். அரசனுக்குத் தன் நாட்டிலே மட்டுந்தான் சிறப்பு. ஆனால் அறிஞனுக்கு அவன் போகின்ற இடமெல்லாமே சிறப்புக் கிடைக்கும்.





இன்று வறுமையாலும் மனமில்லாமையாலும் பல சிறுவர் கல்வியைத் தொடர முடியாமல் இருக்கின்றனர். போரால் பெற்றோரை இழந்த சிறார் பள்ளிக்குச் செல்லும் அரிய வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அவர்கள் இளமைப் பருவம் வறுமையைப் போக்கவேண்டி, தொழில் தேடுவதிலே கழிகின்றது. அவர்களுக்குக் கலை பயிலப் பிறர் துணைசெய்ய வேண்டும். முன்னோரின் பழமொழிக் கூற்று கல்விக்கொடை செய்யவேண்டும் என்பதையும் மறைமுகமாக உணர்த்துகிறது. மேலும் செல்வச் செழிப்பால் கல்வியை உதறிவிட்டுக் களியாட்டம் புரியும் இளமைப் பருவத்தினர்க்கும் ஓர் அறிவுரையாக உள்ளது.
காலத்தை வீணாக்காது கல்விச் செல்வத்தை எல்லோரும் தமது இளமைப் பருவத்திலே தேட வேண்டும் என்ற முன்னோர் பழமொழி வையகத்தவர் அனைவருக்குமே ஏற்றதொன்றாகும்.






ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
Westendorf Str.41 - 44287 Dortmund
குறைந்த விலையில் நிறைந்த உணவுப் பொருட்கள்
Dortmund நகரில்
எமது மலிவு விலைகளை அறிந்துகொள்ள
Web :www.milinimpex.de
Tel: 0231 45 96 17
எமது நிறுவனம்
Mo-Sa 10.00-இருந்து 18.00 வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்




info@milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288





# அட அதர்வாக்கு அக்காவாம்!

இமைக்கா நொடிகள் படத்தில் நயன்தாரா அதர்வாவின் அக்காவாக நடிக்கிறாராம். அஜய் ஞானமுத்து இயக்கத்தில் அதர்வா, நயன்தாரா நடித்து வரும் படம் இமைக்கா நொடிகள் காக்கிச் சட்டை போட்டு வரும் போலீஸ்காரம்மா நயன்தாராவுக்கு ஜோடியாக ஒரு ஹீரோவை தேர்வு செய்துள்ளார் அந்த ஹீரோ வேறு யாரும் அல்ல நம்ம விஜய் சேதுபதி தான்.

பெயருக்கு தலையை காட்டிவிட்டு போகாமல் விஜய் சேதுபதிக்கும் போதிய காட்சிகள் உள்ளதாம். நயனும், விஜய் சேதுபதியும் ஏற்கனவே நானும் ரவுடி தான் படத்தில் ஜோடியாக நடித்துள்ளனர். இந்நிலையில் இமைக்கா நொடிகள் மூலம் மீண்டும் ஜோடி சேர்கிறார்கள்.

# முற்றுப்புள்ளி

ஐஸ்வர்யா ராயை பற்றிய கிசுகிசுக்களுக்கு எப்போதும் பஞ்சம் இருக்காது. அதுவும் இவரை பற்றிய கிசுகிசுக்கள் அதிகமாக கிளம்புவது காதல் காட்சிகளில் தான்.
இது குறித்து அவரது கணவர் மனம்திறந்துள்ளார். அதில் அவர், என்னை பொறுத்தவரை ஐஸ்வர்யா ராய் தான் இந்த பூமியில் மிகவும் அழகான பெண்.

நான் ஒரு நடிகர் என்பதாலோ அல்லது மிக பெரிய நடிகரின் மகன் என்பதாலோ அவர் என்னை திருமணம் செய்து கொள்ளவில்லை.
மேலும், அவர் ஒரு உலக அழகி என்பதால் அவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. மாறாக, நாங்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதலால் திருமண வாழ்க்கையில் இணைந்துள்ளோம். அதனால் திரைப்படங்களில் எப்படிப்பட்ட காட்சியில் ஐஸ்வர்யா நடித்திருந்தாலும், என்னுடைய காதல் மாறாது. இதை உணர்ந்ததாலே ஐஸ்வர்யா தைரியமாக நடிக்கிறார்" என கூறியுள்ளார். இதன் மூலம், ஏய் தில் ஹை முஷ்கில் திரைபடத்தில் ஐஸ்வர்யாரன்வீர் சிங் நடித்திருந்த கவர்ச்சி காட்சிகளின், கிசுகிசுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.




# நீங்கள் முன்னதாக இறந்துவிட்டால், எனக்கு பாதுகாப்பு இருக்காது!






தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த 5-ஆம் தேதி இறந்தார். இந்நிலையில் அவரது நெருங்கிய நண்பரும், ஆலோசகருமான மூத்த பத்திரிகையாளர் சோ ராமசாமி இறந்தார். இதன் மூலம் ஜெயலலிதாவின் ஒரு ஆசை நிறைவேறியுள்ளது. சோ ராமசாமி இறப்பதற்கு முன்னர் தான் இறக்க வேண்டும் என ஜெயலலிதா விருப்பப்பட்டதாக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி முருகன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அப்பல்லோவில் அனுமதிக்கப்பட்டு கடந்த 5-ஆம் தேதி மரணமடைந்தார். அதே போல அவரது நெருங்கிய நண்பர் சோ ராமசாமி அப்பல்லோவில் அனுமதிக்கப்பட்டு ஜெயலலிதா இறந்த இரண்டாவது நாள் அதாவது 7-ஆம் தேதி இறந்தார்.
இந்நிலையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கும், சோ ராமசாமிக்கும் இடையே இருந்த நெருங்கிய நட்பை பற்றி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேற்று பகிர்ந்து கொண்டார்.
அதில், ஒருமுறை சோவுடன் பேசிக்கொண்டிருந்த ஜெயலலிதா, நீங்கள் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறீர்கள். எனக்கு ஒரு ஆசை, உங்களுக்கு முன்னால் நான் இறக்க வேண்டும். நீங்கள் முன்னதாக இறந்துவிட்டால் எனக்கு பாதுகாப்பு இருக்காது என ஜெயலலிதா சோவிடம் கூறியதாக முருகன் தெரிவித்துள்ளார். அன்று சொன்னார் இன்று நடந்து விட்டது அவரது ஆசை. மரணத்திலும் பிரியவில்லை இவர்களது நட்பு.





Hückelhoven நகரில்

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

Handy:01520 900 90 30

VIJAY

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399

T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை

Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS MONEY TRANSFER



அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

EurAsian - Tours



LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692

அனைவருக்கும்
எங்கள் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

VALUTRANS MONEY TRANSFER
துரித பண
மாற்றுச் சேவை!

Further Str. 156
41462 Neuss

இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com



Jasmine Silk House

எமது ஸ்தாபனம்
14.12.2016 முதல்20.02.2017 வரை
திருத்த வேலைகளுக்காக மூடப்பட்டிருக்கும்
என்பதனை வாடிக்கையாளர்களுக்கு
அறித்தருகின்றோம்

புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்

அனைவருக்கும்
எங்கள் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

HP:0173 1937 325
Tel:02102 844744
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas



ASIA BAZAR

Ria Money Transfer
MoneyGram

துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
அனைவருக்கும்
எங்கள் இனிய தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா. கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

வீட்டுக்கடன்
1,0%
வட்டிவீதத்திலிருந்து

நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு

தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/5396138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361 Th. Gobinath

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

HSB SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main





India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam



நமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

Kipper Str.3 44147 Dortmund Germany